சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 3 | இதழ்: 6 | நவம்பர் - 2021 | விலை - ரூ.10/-

VOL:3 | ISSUE: 6 | NOVEMBER- 2021 | Rs. 10/-





திருவாரூர்
குரு தட்சிணாமூர்த்தி

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-3 மலர்-6 நவம்பர் - 2021

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்
திருமதி. S.சாந்தி, சென்னை.
திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.
திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.
திரு. B.முருகன், சோழவந்தான்.
செல்வி. S.சௌம்யா, சென்னை.

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி. அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.



என் அன்பு குழந்தாய்!

வாழ்க்கையில் துணிந்து போராடு எந்த சூழ்நிலையிலும் யாரையும் வெறுத்து ஒதுக்க நினைக்காதே. கடும் சொற்களால் பேச நினைக்காதே.

உனது பாரத்தை முழுவதுமாக என் மீது நம்பிக்கை வைத்து செலுத்து. நான் தயாராக இருக்கும் போது எதற்காக நீ கவலை படுகிறாய்.

நீ படும் வேதனையில் இருந்தும் உன்னை விடுவிப்பேன். உனக்கு ஏற்பட்ட பல கஷ்டங்கள், கடன் தொல்லைகள் இவைகளில் இருந்து உன்னை விடுவிக்க போகிறேன்.

நான் உன்னுடன் இருக்கும் போது வீணாக அழாதே. அழுதது போதும். யார் எல்லாம் உன்னை தூற்றினாரோ அவர்கள் எல்லாம் உன்னை பார்த்து பொறாமை கொள்ளும் காலம் வரப்போகிறது.

நல்லதை மட்டுமே நினை, நல்லதை மட்டுமே பேசு, முடிந்த வரை ஏழை எளியவருக்கு உதவி செய். உன்னை கைவிட மாட்டேன். உனது பாரத்தை சுமக்க நான் துவாரகாமாயியில் காத்துக்கொண்டு இருக்கிறேன்.

- சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...



அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

சற்குரு சாயிநாதரின் அருளால் நாற்பதாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 10.10.2021 ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நமது ஸ்ரீ சாய்ராம் ஆத்ம ஞான சபையில் (17/7A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி, அயனாவரம், சென்னை23) நடைபெற்றது.

இம்மாத இதழை சாயி பக்தை திருமதி. சாந்தி அவர்கள் வெளியிட, முகப்பேர் சாயி பக்தை திருமதி. விஜயலட்சுமி அவர்கள் பெற்றுக் கொண்டு சிறப்பித்தார்கள்.

காலை 6 மணியில் இருந்து ஆசிரியர் அவர்களின் சத்சங்கம், தியானம் நிகழ்ச்சிகளும், செல்வி.அமிர்தா அட்சயா ஆகியோரின் பஜனை நிகழ்சிகளும் நிகழ்ந்தன.

சுவாமிமலை, திருக்குடந்தை ஸ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில், தனக்கு உடல் நலம் சரியில்லாத போதும், நமது சாயி மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக இதழை பக்தர்களுக்கு வழங்கிய நமது அன்பிற்குறிய ஆலய அறங்காவலர் திரு. வீராச்சாமி சாய்ராம் அவர்களின் உடல்நலம் சிறந்து விளங்கி பல்லாண்டு காலம் சாயி சேவை புரிந்திட பகவான் சாயிநாதரிடம் பிரார்த்தனை செய்யப்பட்டது.





உலகம் முழுவதும் அனைத்து சாயி ஆலயங்களிலும் சாயிநாதரின் 103 வது மகா சமாதி தினம் 15.10.2021 விஜயதசமி அன்று மிகச்சிறப்பாக கொண்டாடப்பட்டது. நமது சாய் தியானாலயாவிலும் வழக்கம்போல் அன்று மவுனம் கடைபிடிக்கப்பட்டது.

பாபாவின் ஒவ்வொரு சமாதி தினத்திலும் நம்முடைய அனைத்து வழிபாடுகளுடன், நம்மிடம் இருக்கும் தேவையில்லாத பழக்க வழக்கங்களையோ, புறப்பொருட்களின் சேர்க்கையையோ ஏதாவது ஒன்றை வாழ்க்கை முழுக்க விட்டு விடுகின்றேன் என்று உறுதிமொழி ஏற்றுக்கொள்ளலாம்.

அதுவே நாம் பகவான் சாயி நாதருக்கு சமர்ப்பிக்கும் சிறந்த காணிக்கையாக இருக்கும் என்று நம்புகின்றோம்.

வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் சாய் தியானாலயாவின் அன்னதானக் குழுவினர் அன்னதானம் அளித்தனர். புத்தக வெளியீட்டை ஒட்டி அன்னறைய தினம் ஏழை எளியோர் 100 பேருக்கு அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் அளிக்கப்பட்டது.

பகவான் சாயிநாதரின் அருளால் மிக விரைவில் உலகெங்கும் பரவியிருக்கும் பெருந்தொற்று கட்டுக்குள் வந்து உலக மாந்தர்கள் அனைவரும் நிம்மதியுடனும், ஆரோக்கியத்துடனும், வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம்.







மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்! வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!



எது பக்தி?

சுவாமி பல பேரை உடனே குணப்படுத்துகிறார். சிலபேரை உடனே இல்லாமல் பொறுமை காத்து பின்னர் குணமளிக்கிறார். ஏன் இந்த பேதம்? பல பேரை உயிர் பிழைக்க வைக்கும் சுவாமி,சென்ற உயிர்களையும் உடம்புக்குள் மீட்டு வரும் சுவாமி, கொடும் விஷம் உண்ட பக்தர்களின் உடம்பிலிருந்து எந்த வித அடையாளமின்றி அந்த விஷத்தினை எடுத்துவிடும் சுவாமி, சில பேர்க்கு உடனே செய்வதில்லையே ஏன்? சுவாமியே பதில் சொல்கிறார்.

"நீங்கள் அனுபவிக்கும் துன் பங்களும், நோய்களும் நீங்களே தேடிக் கொண்டவை. பூர்வ பாவங்களால் விளைந்தவை" என்கிறார். பாவம் கடுமையாக இருக்கும் பட்சத்தில் அதை அனுபவித்தே தீர்க்க வேண்டும். சுவாமியிடம் அசையாத நம்பிக்கை வைத்திருந்தால் அந்த கொடும் கர்ம பொழுதுகளை எளிதாக கடந்து விடலாம்.

பக்தியே எதையும் ஏற்றுக் கொள் ளும் இதயத்தை தருகிறது. பக்தியின் அடிப்படை சுபாவமே அது தான். "ஏற்றுக் கொள்வது" எப்போது நான் வேண்டியது நடக்கும்? என எதிர்பார்ப்பதல்ல பக்தி. அது வியா பாரம். பணத்தை கொடுத்து பொருளை வாங்குவது போல் பிரார்த் தனை செய்து ஆசையை அடையும் நோக்கம்

பக்திக்கு இல்லை.

காரணம், "பக்திக்கு ஆசையே இருப்பதில்லை. யாராலும் அசைத்துப் பார்க்க முடியாத சமாதானத்தை பக்தி தருகிறது." நெருப்புக்கு சுடுவது குணம். பக்திக்கு எதையும் ஏற்றுக் கொள்வது குணம். ஏற்றுக் கொள்வது என்பது அய்யோ இப்படி ஆகிவிட்டதே என அதனை அனுபவிப்பது அல்ல.

எதனோடும் ஒட்டாமல் சாட்சியாய் இருந்து பார்ப்பது. அந்த தன்மை அதுவே பெருந்தன்மை. அப்படிப்பட்டவர்களே பக்தர்கள். அப்படிப்பட்ட பக்தர்கள் ஏராளமாய் இருக்கிறார்கள். அதனால் தான் யோகியர்க்கும் கிட்டாத சுவாமி தரிசனம் பக்தர்க்கு கிட்டுகிறது! இப்படிப்பட்டவர்களில் சிலரின் அனுபவங்கள் சிலிர்க்க வைக்கும்!

நியூயார்க்கிலிருந்து வந்த நிருபர் ஒருவரிடம் சுவாமி துயரங்களை பற்றி விளக்குகிறார். "அதற்கு ஒரு காரணம் இல்லை என்றால் நான் உனக்கு வேதனையை கொடுப்பேனா? வேதனையை நீ அனுபவிப்பதன் மூலம் பாப கர்மாக்களை நீ எரிக்கிறாய். அதனால் நீ பரிசுத்தம் அடைகிறாய். உன் இதயத்தை அந்த வேதனைக்கு வடிகாலாக திறந்துவிடு. இன்பத்தை அனுபவிக்க திறந்துவிடுவது போல். அது உனக்கு நன்மையை அளிக்கும். நீ செய்த தவறுகளை எண்ணி வருந்துவதனால் உனக்கு நிம்மதி கிடைக்கிறது. துன்பத்தை பொறுத்துக் கொள்ள அதிலிருந்து நீ நன்மையை பெற முடியும்" என்கிறார் சுவாமி.

பாம்பு விஷத்திலிருந்து மருந்து எடுப்பது போல். மின்னலிலிருந்து மின்சாரம் எடுப்பது போல். இன்னலிலிருந்து மனப்பக்குவம் ஏற்படுகிறது. பக்குவமான உணவையே நாம் ஏற்றுக் கொள்வதைப் போல் பக்குவமான இதயத்தையே சுவாமி ஏற்றுக் கொள்கிறார். யாராவது கசப்பான காய் கொடுத்தால் நாம் ஏற்றுக் கொள்வோமா? ஆனால் சுவாமியிடம் நம் விஷமான. மிகவும் கொடும் விஷமமான மனத்தை கொடுத்தால் அவர் மட்டும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என நினைப்பது என்ன நியாயம்?

டில்லி சேர்ந்த பக்தை ஆஷா. ஒருமுறை சுவாமியிடம் "சுவாமி என் கணவர் ஒரு முக்கியமான வேலையில் இருக்கிறார்.அவருக்கு தொண்டையில் புற்று நோய். அதை அறுவை சிகிச்சையால் குணப்படுத்த முடியாது என சொல்லிவிட்டார்கள். நீங்கள் தான் குணமடையச் செய்ய வேண்டும்" என்கிறார்.

அவரின் புற்றுநோயை சுவாமி உடனே குணப்படுத்தி அனுப்புகிறார். வலியும் வேதனையும் இன்றி அமைதியுடன் வாழ்கிறார். ஆனால் ஒன்றரை ஆண்டுகள் மட்டும் தான் அவரால் வாழ முடிந்தது.பிறகு உடல் நீத்தார். பிறகு ஆஷாவிடம் சுவாமி "உன் கணவனுடைய கர்ம பலனை அவர் அனுபவித்தே ஆக வேண்டும். அதை நான் நீக்க முடியாது. ஆயினும் உன்னுடைய வேண்டுகோளுக்காக அவனுக்கு அனுதாபம் காட்டினேன். ஒன்றரை ஆண்டுகள் அவனை வலியின்றி வாழ வைத்தேன். அவ்வளவு தான்" என்கிறார்.

துடிதுடித்துச் சாக வேண்டிய ஆஷாவின் கணவர் உயிர் அமைதியோடு உலகை விட்டு நீங்கியது! பிறக்கும் போதே இறக்கும் தேதியையும் நம் கர்ம பலனால் குறித்துக் கொண்டே நாம் பூமிக்கு வருகிறோம். நம் பாப,

புண்ணிய கர்ம பலன் பொருத்தே சுவாமி நம் ஆயுளை நீட்டிப்பதும், அடுத்த பிறவிக்கு கர்மாவை ஒத்திப் போடுவதும். இல்லை எனில் அப்படியே விட்டுவிடுவதும். அது நம் பாப கர்ம வீர்யத்தை பொருத்ததே. இதை உணரும் போது மனம் பவ்யமாகி பிறரை நோகடிக்காத நிலையை அடைகிறது!

கேரள தெள்ளச் சேரியை சேர்ந்த திருமதி ராமகிருஷ்ணன் பழுத்த சுவாமி பக்தை. ஒரு முறை அவர் தனது மகன், மகள், மருமகளோடு சுவாமி தரிசனம் புரிய வொயிட் ஃபீல்ட் வந்து கொண்டிருந்த பயண சமயத்தில், வழியில் கார் விபத்தாகி மகன் இறந்து போகிறான். மகளுக்கும் அவருக்கும் பலத்த காயம். மருமகளுக்கோ வலது காலின் உணர்ச்சி போய்விடுகிறது.

ஒரே மகன், சீமந்த புத்திரன், சாவுக்கு அள்ளிக் கொடுத்துவிட்டாள். புத்ர சோகம் என்பது பெற்றோர்க்கு இழப்புகளின் உச்சம். மூன்று மாதம் மருத்துவமனை வாசம். குறை சொல்வதற்கே உறவினர்கள் இரையை கொத்தும் கழுகாய் பறந்து வருவார்கள். அப்படியே வந்தார்கள்."ஏன் இன்னமும் அந்த பாபாவையே நம்பிக் கொண்டிருக்கிறாய்? அதனால் எந்த நன்மையையும் கிடைக்கவில்லையே " என்கிறார்கள்.

வெந்த புண்களில் வேலைப் பாய்ச்சுவதே பல உறவினர்களின் வேலை. இன்னமும் அந்த வாய்கள் மூடாமல் விசத்தை கொட்டியது. மனித நாக்கை விட எந்த நாகமும் கொடியதில்லை என்பது போல்.

"அவரை தரிசிக்கப் போகிற வழியில் தானே உன் மகனை இழந்தாய்"



என்கிறார்கள். வழியில் செல்பவனை குழியில் தள்ளி விடுவது போல் வம்பால் இதயத்தை அசைக்கப் பார்க்கிறார்கள். ஆனால் திருமதி ராமகிருஷ்ணா அசையவே இல்லை. அபத்த வார்த்தைகளுக்காக ஏன் அசைந்து கொடுக்க வேண்டும்?

"சுவாமிக்காக எதனையும் தியாகம் செய்வதே பக்தி! எதற்காகவும் சுவாமியையே தியாகம் செய்வதா பக்தி? அந்த அபத்தத்தை திருமதி ராமகிருஷ்ணா செய்யவே இல்லை. யாரோ ஏதோ சொல்லிவிட்டால் மனம் சுவாமியை நினைத்து சமாதானம் அடையாமல், அந்தச் சொல்லை நினைத்து அல்லாடுவதா பக்தி?

திருமதி ராமகிருஷ்ணா பழுத்த பக்தை.

நரம்பற்ற நாக்கு , வரம்பற்ற வார்த்தை பக்குவமற்ற இதயத்தைத் தான் பதம் பார்க்கும்! பிரபஞ்சத்தையே அடைகாக்கும் "பக்தி இதயத்தை" அவை என்ன செய்துவிட முடியும்?

ஓரளவுக்கு குணமான பின் சுவாமியை தரிசிக்க ஆம்பு

லன்ஸ்'சிலேயே ஏறிப் போகிறார்கள். சுவாமி அவர்களை அந்த வண்டியில் ஏறியே ஆசீர்வதிக்கிறார். "இன்னும் சில மாதங்களில் எல்லோரும் குணமடைந்து விடுவீர்கள்" என்கிறார்.

"சுவாமி எனக்கு ஏன் இந்த சோதனை. என் மகனை இழந்து விட்டேனே?" என கேட்கிறார் திருமதி ராமகிருஷ்ணா. "அம்மா, உன் மகன் வாழ்ந்து அனுபவிக்க வேண்டிய கர்ம பலன் முடிந்துவிட்டது. அதனால் அவனை என்னிடம் அழைத்துக் கொண்டேன். ஆனால் அதன் பிறகு உனக்கு என் மேல் நம்பிக்கை குறையுமோ எனப் பார்த்தேன். ஆனால் அது துளியும் குறையவில்லை. நீ என் மேல் உள்ள பக்தியை துளியும் இழக்கவில்லை. அதுதான் உனக்கு வாழ்க்கையில் கிடைத்த மிகப்பெரிய பாக்கியம்" என்கிறார்.

"பக்திக்கு மிஞ்சிய மாமருந்து எதுவும் இந்தப் பூமியில் இல்லை. மனப் பக்குவத்திற்கு மிஞ்சிய விருது இந்தப் பிரபஞ்சத்தில் கூட எதுவும் இல்லை.

சுவாமி பக்தர்கள் நாம் மன நிம்மதியோடு மட்டுமே வாழ வேண்டும்! அதுவே நம் பக்திக்கான வாழ்வியல் வெளிப்பாடு.. மனப்பக்குவமே மன நிம்மதியை தருகிறது! வேறெதுவுமில்லை!

முன்பின் தெரியாத ஓட்டுனர்களை நம்பி நாம் பேருந்திலும் ரயிலிலும் பயணத்தை நிம்மதியாக மேற்கொள்கிற போது, சர்வ சாட்சிய நித்திய பரம் பொருளான சுவாமியை நம்பி நம் வாழ்க்கைப் பயணத்தை நிம்மதியாக மேற்கொள்ளாமல் எதற்கெ டுத்தாலும் வருத்தப்பட்டுக் கொண்டே இருப்பது அது எப்படி திடமான பக்தி ஆகும்?.

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

தொடர் –40

குருவைத் தேடி

தன் இரு கைகளையும் தலைக்கு மேல் உயர்த்தி என்னை ஆசீர்வதித்தார். தட்டில் இருந்த ஒரு லட்டை எடுத்து என்னை நோக்கி எறிந்தார். நான் அதை லாவகமாகப் பிடித்துக் கொண்டேன். ஆனந்தமாக நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கி எழுந்தேன்.

உள்ளுக்குள் ஏதோ ஒரு மூலையில நம்பிக்கை ஊற்று மெதுவாய் கசிந்ததை உணர முடிந்தது. மெல்ல மனது ஓம் குருராயா, சற்குரு ராயா என்று உச்சரிக்க ஆரம்பித்தது. இவரே என் குரு, இவர்தான் என் குரு. கண்டுபிடித்துவிட்டேன். கண்டுபிடித்துவிட்டேன். மனம் ஆனந்த கூத்தாடியது.

இனி இவரையே இறுக்கிப் பிடித்துக் கொள்ள வேண்டியது தான். வேறு வழி இல்லை. இனியும் என்னால் ஓட முடியாது. அதுவரை நான் பட்ட துன்பங்களும், துயரங்களும் என் கண்முன்னே வந்து, வந்து, போயின. அப்பாடாஞ். ஒருவழியாக குருவைத் தேடிவிட்டேன்.

ஆனால் என் வாழ்க்கை துயர் நீங்க குருவை தேடினேனா, அல்லது என் பிறவித் துயர் நீங்க குருவைத் தேடினேனா, என்பதில் அப்போது எனக்கு சற்று தெளிவில்லை. இருப்பினும் அந்த வயதில் எனக்கு என் வாழ்க்கை துயரே பெரிதெனத் தெரிந்தது.

இவரிடம் நாம் இனி அடிக்கடி வரவேண்டும். என்றவாறு சற்று தெளிந்த மனதுடன் ஆஸ்ரமத்தை விட்டு வெளியேறினேன். கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. மனதிற்கும், மழைக்கும் அப்படி என்ன தொடர்போ தெரியாது. "துன்பமான மனம் கூட மழை பெய்தால் ஏதோ இனம் புரியாத இன்பத்தில் மிதக்கும்".

என் மனமும் வெகுநாள் கழித்து ஆனந்தத்தில் மிதந்தது. மழையில் நனைந்து கொண்டே கிரிவலம் சென்றேன். அடி அண்ணாமலைக்கு வந்தபோது இருட்டிவிட்டது. மழை விட்டும் தூறல் விடாதிருந்தது. மழையில் நனைந்து கொண்டே நடந்ததால் உடலுக்கு ஓய்வு தேவைப் பட்டது. அருகே இருந்த விநாயகர் கோவிலில் சென்று அமர்ந்தேன். சற்று நேரத்தில் உட்கார்ந்த நிலையிலேயே



நன்றாக உறங்கி விட்டேன்.

எவ்வளவு நேரம் தூங்கினேன் என்று தெரியவில்லை. என் பெயரைச் சொல்லி யாரோ எழுப்புவது போலிருந்தது. விழித்துப் பார்க்கின்றேன். இன்னும் விடியவில்லை.மங்கலான வெளிசத்தில் என் எதிரில் யாரோ நிற்பது தெரிகின்றது. கண்களை கசக்கிக் கொண்டு பார்க்கின்றேன்.

எதிரில் நிற்பவர் விசிறி சுவாமிகள் பதறி அடித்து கொண்டு எழுந்து அவர் பாதம் பணிகின்றேன். கையை உயர்த்தி ஆசீர்வதிக்கின்றார். எதிரில் இருக்கும் தேனீர் கடையை காட்டி ராம் சூரத் குமார், ராம் சூரத் குமார் என்றவாறே பிள்ளையார் கோவில் வாசலில் அமர்கின்றார். நான் தேனீர் கேட்கின்றார் என்பதை புரிந்து கொண்டு தேனீர் கடைக்கு ஓடுகின்றேன்.

மழை பெய்ததால் இரவில் பக்தர்கள் கிரிவலம் செல்லாமல் ஆங்காங்கே தங்கிவிட்டிருந்தனர். நடந்து கொண்டிருந்த ஒரு சில பக்தர்களும் தூக்க கலக்கத்தில் சென்று கொண்டிருக்க, ஒருவரும் சுவாமிகளை கவனிக்க வில்லை.நான் தேனீர் கடைக்கு சென்று மாஸ்டரை எழுப்பி தேனீர் போட்டு வாங்கிக் கொண்டு வந்து சுவாமிகளிடம் கொடுத்தேன்.

இரண்டு மடக்கு குடித்துவிட்டு திரும்ப என்னிடமே கொடுத்து விட்டார். நான் அந்த பிரசாதத்தை ஒரே மடக்கில் குடித்துவிட்டேன். மெல்ல எழுந்து கொண்ட சுவாமிகள் என்னைப் பார்த்து சிரித்தார். பிறகு மெல்ல, பைத்தியம். பைத்தியம்.. நான் அல்ல உன் குரு, உன் குரு மேலே இருக்கான். இன்னும் ரொம்ப தூரம் போகணும். அது பெரிய சர்க்கார்ஞ். உனக்கு போகத் தெரியாது அவனே உன்னை இழுத்துப்பான். அதுவரைக்கும் வீட்டைப் பார் சும்மா இருக்காதே! ராம்...ராம்... சொல்லு என்றவாறே என்னை விட்டு நடந்து இருளில் மறைந்தார்.

எனக்கு ஒன்றுமே புரியவில்லை. இவர் தான் என் குரு என்று மனதில்தானே நினைத்தேன். ஒருமுறையாவது சுவாமிகளைப் பார்க்க மாட்டோமா என்று பலர் ஏங்கிக்கொண்டிருக்க, சுவாமிகளே என்னிடம் பேசிவிட்டுச் செல்கின்றார். இப்போது நான் அவரின் பின்னால் ஓடுவதா, இல்லை அவர் என்னிடம் கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்ப்பதா?

மதியத்தில் இருந்து என் மனம் ஆனந்தத்தில் இருந்தது. சுவாமிகளின் பேச்சை கேட்டதும் உடனடியாக மீண்டும் என் மனம் பழைய நிலைக்குத் திரும்பியது. மனம் படபட வென்று அடித்துக் கொண்டது. கால்கள் தடுமாற ஆரம்பித்து விட்டது. நான் மீண்டும் கோவில் வாசலில் உட்கார்ந்து விட்டேன்.

இவர் என் குரு இல்லையா, என் குரு ரொம்ப தூரத்தில் இருக்காராமே? ரொம்ப தூரம்னா எங்க? ஒரு வேளை ரிஷிகேஷ்ல இருப்பாரோ. அங்கே எப்படி போறது. உனக்கு போகத் தெரியாதுன்னு சொல்றாரே.. அப்படின்னா.வீட்டைப் பாருன்னு சொல்றாரே, வீட்டை எங்க பாக்குறதுஞ் .வீட்டை நெனச்சாலே தலை சுத்துதே!

நமக்கு குரு கிடைச்சுட்டாரு, இனிமே எங்கேயும் சுத்த வேண்டியது இல்லைன்னு சந்தோசப்பட்டேன். அந்த சந்தோசம் கொஞ்ச நேரம் கூட நீடிக்கலேயே, நான் உன் குரு இல்லேன்னு அவரு வாயாலேயே சொல்லிட்டுப் போறாரே? ஒருவேளை

நான் அவரு சீடனா இருப்பதற்கு தகுதி இல்லைன்னு இப்படி சொல்லிட்டு போறாரோ? எனக்கு உண்மையிலேயே மண்டை வெடித்துவிடும்படி இருந்தது.

கைக்கு கிடைத்தது வாய்க்கு கிடைக்கவில்லையே என்ற நிலை.

தலையில் கையை வைத்தபடி விடியும் வரை அப்படியே உட்கார்ந் திருந்தேன். மீண்டும் மழை பிடித்துக் கொண்டது. இப்போது மழை எனக்கு பிடிக்கவில்லை. வேண்டா வெறுப்பாக மழையில் நனைந்து கொண்டே கிரி வலத்தை முடித்தேன். வெகுநேர காத்தி ருப்பிற்குப் பின் பேரூந்து பிடித்து ஊர் வந்து சேர்ந்தேன்.

வழி நெடுக மழை. நனைந்து நனைந்து தலை வலிக்கின்றது. தலையில் முடி காடாக வளர்ந்து கிடக்கின்றது. ஊருக்கு வந்ததும் முதல் வேலையாக முடி வெட்டவேண்டும் என்று நினைத்தேன்.

எப்போதும் முழு போதையில் இருக்கும் நண்பர் கிருஷ்ணா அன்று தெளிவாக இருந்தார். கடையில் வாடிக்கையாளர்கள் யாரும் இல்லை. மெய்ஞானத்தைப் பற்றி பேச வேண்டுமென்றால் நானும் கிருஷ் ணாவும் மணிக்கணக்கில் பேசுவோம். என் ஆத்மாவிற்கு இணக்கமான நண்பர்.

கிருஷ்ணா வயதில் என்னைவிட மூத்தவர். "வாழ்க வளமுடன்" அறிவுத் திருக்கோவிலின் பயிற்சி குழுவில் என்னுடைய மாணவர். ஆகவே மரியாதை நிமித்தமாக என்னை சார் என்றே அழைப்பார்.

என்ன கிருஷ்ணா, தெளிவா இருக்கீங்க, நானே பேச்சை ஆரம்பித்தே தன். அதெல்லாம் ஒண்ணும் இல்லே சார் சொல்லணும்னா ரொம்ப குழப்பமா இருக்கேன் என்றார். பின் அவரே தொடர்ந்தார்.

போன வாரம் வீட்டிலே பிரட்சனை சார் எனக்கும் எம் பையனுக்கும் தகராறு, எப்பவும் நடக்குறதுதான். இந்த தடவை கொஞ்சம் கைமீறிப் போயிருச்சு, எம் பையன் என்னை அடிச்சுட்டான் சார்.. என்று அழுதார். பின் அவரே தொடர்ந்தார்,

தப்பு எண்ணமோ என்னுது தான். இருந்தாலும் நான் பெத்த எம் பையனே என்னை அடிச்சுட்டான்னதும் மனசு கேட்கல சார்...அதான் தீர்மானமா ஒரு முடிவெடுத்துட்டேன். இனிமே தண்ணி சாப்பிடுறது இல்லேன்னு ஒரு வாரமா சாப்பிடலே, அதுதான் உங்களுக்கு தெளிவா தெரியலாம்.

ஆனா நான் இன்னொரு முடிவும் எடுத்திருக்கேன் சார் அது உங்களுக்கு தப்பா தெரியலாம். ஆனா எனக்கு வேற வழி தெரியலே, துறவியா போயிடலாம்னு இருக்கேன் சார். என்றார்.

எப்போதிலிருந்து என்றேன் நான்.

அதுதான் யோசிக்கின்றேன் என்றார் கிருஷ்ணா.

இந்த நிமிசத்திலே இருந்துன்னு வச்சுக்கங்களேன் என்றேன் நான்.

சரி.

இப்படியே கடையிலே இருந்து நீங்க துறவியா போயிடனும்.. எப்படி போவீங்க..

அது எப்படி சார் போக முடியும்? ஒரு வேட்டி சட்டை இல்லாம என்றார்.

துறவியா போறதுன்னு முடிவெடுத் தாச்சு, அப்பறம் எதுக்கு வேட்டி சட்டை.

கிருஷ்ணா பேசவில்லை. மீண்டும் நானே பேசினேன். பரவாயில்லை ஒரு மாத்து துணிஎடுத்துக் கிட்டீங்க, புறப்பட்டு போறீங்க எங்க போவீங்க..

எங்கனா கண்காணாத தூரத்துக்கு போக வேண்டியதுதான்.

சரி நடந்து நடந்து மதியம் வந்தி ருச்சு பசிக்குது, கையிலே காசில்லே, என்ன செய்வீங்க. எதிரில் வருகின்ற யாரிடமாவது பிச்சை கேட்பீங்களா?

பிச்சையா. என்ன சார்.. அது எப்படி எடுக்க முடியும் என்றார்.

அதே மாதிரிதான் நாம எப்படி துறவி ஆக முடியும். அதுக் கெல் லாம் தலையிலே ஏற்கனவே எழுதி யிருக்கணும் கிருஷ்ணா. ஏழு சென் மத்துக்கு முன்னாடியே திட்டம் ஆரம்பிக்கணும்.

சும்மாவா, ஏதோ ஒரு வேகத்துல சாதாரண குடும்ப பிரச்ச னைக்கெல் லாம் எங்கனா போயிடலாம். இல் லாட்டி செத்து போயிடலாம்ன்னு நம்மளை நாமே ஏமாத்திக்கக் கூடாது. எதற்கும் தயாரா இருக்கணும், எது நடந்தாலும் அதை அப்படியே ஏத்துக்கணும்.

இந்த உலகில் பிறந்தன அனைத்தும் அழியும். நாமெல்லாம் மரணத்தை நோக்கி ஓடும் மாயங்கள். மரணம் மட்டுமே உண்மை. அதை அழுத்தமா ஏத்துக்கிட்டவனுக்கு இடையிலே நடக்குற சம்பவங்கள் எப்படி பாதிப்பை ஏற்படுத்தும். மரணத்தை விட பெரிதா நாம் சந்திக்கும் குடும்ப பிரட்சனைகள்.

எல்லா பிரட்சனைக்கும் முடி வுண்டு. எது வரைக்கும் போகுமோ அதுவரைக்கும் போகட்டும்னு விட்டுப் பாருங்கள்.

நமக்கு வரும் வலிகள் எல்லாம் வலி இல்லை. மாயை. இவ்வுலகில் நமக்கு துன்பத்தையும், துயரத்தையும் தருவதாக நாம் நினைக்கும் அனைத்தும் நம்மால் காணப்படும் புறப்பொருட்களால் தானே வருகின்றது. அவைகளை காண்பவன் இல்லை என்றால் காணப்படும் பொருள் ஏது?

சரியா புரியலை சார் கொஞ்சம்



புரியறமாதிரி விளக்கமாச் சொல்லுங்க என்றார் கிருஷ்ணன்.

உதாரணத்திற்கு ஒரு தட்டில் பனிக்கட்டி இருக்கின்றது. நான் காண்கின்றேன். சற்று நேரத்தில் கரைந்து விட்டது. இப்போது பனிக் கட்டி இல்லை. அதையும் நானே காண்கின்றேன். சற்றுமுன் இருந்தது, இப்போது இல்லை. ஆனால் காண் பவன் நான் இருக்கின்றேன்.

அப்படியானால் இவ்வுலகில் காணப்படுபவை பொய் அல்லவா? பொய்யான தோற்றங்கள், மெய்யான பிரம்மத்தை எவ்வாறு வருத்தப்பட வைக்க முடியும்?

கிருஷ்ணா எனக்கு முடி வெட் டுவதை நிறுத்திவிட்டார். நானும் பேசுவதை நிறுத்தினேன். இதுவரை நான் பேசியது கிருஷ்ணனுக்கா, அல்லது எனக்கா, அடுத்தவருக்கு கூறு கின்ற வார்த்தைகள் சில நேரங்களில் நமக்கே ஒத்துப் போகும்.

நீங்க சொன்னது சரிதான் சார்.. நான் என் பாதையை மாத்திக்கறேன் என்றவாறே வேலையை முடித்தார்

கிருஷ்ணன்.

நான் பேசியது கிருஷ்ணணுக்கு புரிந்ததா, என்று தெரியவில்லை எனக் குள் ஏதோ புரிந்தது போன்று இருந்தது. வீட்டிற்கு வந்து குளித்துவிட்டு ராமசாது குருநாதரைப் பார்க்க ஆஸ்ரமம் சென் றேன். குருநாதரின் சமாதிக்கு சென்று தியானம் செய்ய முயற்சித்தேன். முடியவில்லை.

ஏதோ என் குருநாதர் என்னை அநாதையாக விட்டுவிட்டு சென்றதைப் போன்றதொரு உணர்வு என்னை தியானம் செய்யவிடாமல் தடுத்தது. அதற்குப்பதில் விம்மி, விம்மி அழு கைதான் வந்தது. பல்லைக் கடித்துக் கொண்டு வெகுநேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தேன்.

"அசைவு ஆனந்தத்தை மறைக்கின் றது. அசைவை நிறுத்து ஆனந்தம் வெளிப்படும்" என்ற என் குருநாதரின் வார்த்தைகளை மீண்டும், மீண்டும் சிந்தித்துக் கொண்டே இருந்தேன்.

வெகுநேரம் கழித்து, சைக்கிளை தள்ளிக்கொண்டு நடந்தே வீட்டிற்கு வந்தேன். வரும் வழியில் கிருஷ்ணணின் கடையில் மீண்டும் கிருஷ்ணாவைப் பார்த்தேன். ரொம்ப அமைதியாக அமர்ந்திருந்தார்.

என்னைப்பார்த்ததும் கைகளையும் கூப்பி நன்றி சார் என்றார்.

எங்கள் பழக்கத்தில் இதுவரை அவ்வாறு அவர் செய்ததில்லை. இன்று அவரின் செய்கை எனக்கு சற்று வித்தியாசமாகப் பட்டது. இருப்பினும் காலையில் நாம் பேசியதற்கு நன்றி கூறு கிறார் போலும் என்றவாறே சிரித்துக் கொண்டே அவரைக் கடந்து சென்று விட்டேன்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து கும்பேஸ்வரன் கோவில் கும்ப முனிவரின் சன்னதியில் தியானம் செய்து விட்டு, கடைத்தெருவிற்கு வந்தேன். என்னவோ தெரியவில்லை. காலையிலேயே கிருஷ்ணாவை பார்க்க வேண்டும் போல் இருந்தது.

கிருஷ்ணாவின் கடை திறந்திருந்தது. கிருஷ்ணாவை காணவில்லை. அவ ரின் உதவியாளர் வேலை செய்து கொண்டிருந்தார். நான் கடைக்குச் சென்றதும் என்னை வரவேற்றார். நாங்கள் இருவரும் தேனீர் அருந்திவிட்டு காத்திருந்தோம். நேரம் போனதே தவிர கிருஷ்ணா வரவில்லை.

மணி 8 இருக்கும். கிருஷ்ணாவின் மகன் வந்து அப்பா தூக்கத்திலேயே இறந்து விட்டதாகக் கூறினான். என் உள் மனம் இதை எதிர்பார்த்ததா என்று தெரியவில்லை. நான் எந்த வித உணர்வும் இல்லாமல் அப்படியே உட்கார்ந்திருந்தேன். 9 மணி இருக்கும் கிருஷ்ணாவின் உதவியாளர் கடையைப் பூட்டிவிட்டு, புறப்பட்டார். நானும் சைக்கிளை எடுத்துக் கொண்டு கிருஷ்ணாவின் வீட்டிற்குச் சென்றேன்.

வாசலில் சேர் போட்டு அதில் அமர்ந்திருந்தார் கிருஷ்ணன். நேற்று மாலை கடையில் எப்படி அமைதியாக அமர்ந்திருந்தாரோ அப்படியே இருந்தது முகம். அதே அமைதி. மரணம் மட்டுமே உண்மை என்பதை உணர்ந்து கொண்ட அமைதி. மரணத்தை எதிர் நோக்கிய அமைதி.

அடாடா கிருஷ்ணன் இறந்து விட்டாரா, மீண்டும், மீண்டும் என்க் குள்ளேயே திரும்ப, திரும்ப கூறிக் கொண்டேன். அந்த கஷ்ட காலத்தில் என்னோடு பேச்சுத் துணைக்கு என்று இருந்த ஓர் ஆத்ம நண்பனை இழந்து விட்டேன். இனி யாரிடம் பேசுவது. கிருஷ்ணா இறந்து விட்டார் என்பது அப்போதுதான் எனக்கு உறைத்தது.

- (தொடரும்)

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

மிகவும் கடுமையான கலியின் களியாட்டத்தில் பலவிதமான இயற்கை சீற்றங் களினால் அல்லல்படும் நம் அனைவருக்கும் கலியுகத் தின் முதல் தத்த அவதாரியும் ஸ்ரீ ஷீரடி சாயிபாபா உருவில் என்றென்றும் நம்மை காத்து அருள்புரியும் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் அருளிச்செய்த இந்த மாமந்திரத்தை அனுதினமும் ஜபம் செய்து முழுமையான பாதுகாப்பு வளையத்தில் நாம் திகழ்ந்திட...



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ர தத்தாத்ரேயா திகம்பரா"!

– என்ற நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மந்திரத்தை ஜபம் செய்ய வேண்டுகிறோம்.

இம்மந்திரத்தை தினமும் 108 முறை ஜபம் செய்ய வாய்வு மண்டலத்தில் உள்ள எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து நம் அனைவருக்கும் பாதுகாப்பு கிட்டும் என்பது அனுபவப்பூர்வமான உண்மை.

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

தொடர் –4

சாய் சரவணன்

"அதி தேவதை"

ஸ்ரீ சச்சிதானந்த சற்குரு நாதா, மனதை மயக்கும் வடிவுடைய பாண்டுரங்கா! தீனதயாளா, உன்னருள் கொண்டு என்னை காப்பவனே, இவ்வுலக வாழ்வு எனக்கு பயமாக தோன்றுகிறது. நீயே இவ்வுலக வடிவாய் என்னுள்ளே தோன்றினாலே ஒழிய அடியேன் கடைந்தேறுவது சிரமம்.

சாயிநாதா! பக்தர்களுக்கு புகழிடமாக இருப்பவனே! எனக்கு உன்மேல் பக்தியும் இல்லை, பாசமும் இல்லை. இருப்பினும் நீயோ, "கன்றை காக்கும் பசுவைப் போல" என்னைக் காத்து நிற்கின்றாய். கருணாமயா, ஸ்ரீ விட்டலா கருணை காட்டு கருணாகரா, ஸ்ரீ சாயிராம பாண்டுரங்கா, உன் பாதமே அபயம்!

சங்கம்நேர் எனும் ஊரில் சுந்தராபாயி திருமணம் முடித்த நான்காம் நாளே கணவனை இழந்தாள். இதைக்கண்டு அனைவரும் அவளின் மீது வெறுப்பையும், குற்றத்தையும் சுமத்தி திட்டித் தீர்த்தனர். சுந்தராபாயி தன் தாத்தாவோடு பண்டரிபுரத்துக்கே வந்து விட்டாள்.

விட்டலன் மீது அவள் கொண்ட பக்தி அவளது மனதை சிறிதே சாந்தப் படுத்தினாலும், அத்தகைய சிறு வயதில் கணவனின் இழப்பையும் அதனால் தன் மீது சுமத்தப்படும் குற்றத்தையும் தாங்கமுடியாது தவித்தாள். அந்த இழப்பை சரிசெய்ய சதா விட்டலனது தரிசனம், பூஜை, பஜனையில் மூழ்க ஆரம்பித்தாள்.

காலம் செல்ல, செல்ல, தன் பேத்தி வாழ்வு பறிபோனதை எண்ணி மனக்கலக்கமுற்ற தாத்தா ஆழ்ந்த துக்கத்தில் மூழ்கி விரைவிலேயே உயிரை விட்டார்.

கணவனின் இழப்பில் இருந்தே மீளாத சுந்தராபாயிக்கு, ஆதரவாக இருந்த ஒரே துணையான தாத்தாவும் உயிரை விட்டது இடி எனத் தாக்கியது. இத்தகைய சிறிய வயதில் அடுக்கடுக்கான வேதனைகளும், துயரங்களும் அவள் வாழ்வை சூழ்ந்து கொண்டது.

இத்தகைய இக்கட்டான சூழ்நிலை யில் தன் தோழியான பிக்குபாயி மட்டுமே அப்போதைக்கு ஆறுதலாக இருந்தாள். வாழ்வனைத்தும் துர திஷ்டமாக போனதை எண்ணி கவலைப்படுவதா? இல்லை இவை யாவும் முன்பே நிச்சயிக்கப்பட்ட சங்கல்பமாக கருதுவதா? என எண்ணி வருத்தம் அடைந்த போதிலும், விட்டலுக்கு செய்யும் சேவைகளை விடாதபடி தன் வாழ்வை கழித்தாள்.

உண்மையில் சுந்தராபாயின் வாழ் வில் ஏற்பட்ட துயர சம்பவங்கள் அனைத்திற்கும் ஓர் காரணம் இருந்தது. அதன் காரணத்தை விட்ட லனே அறிவான். அதனால்தான் பகவான் சுந்தராபாயிக்கு வாழ்வில் வைராக்கியத்தை ஊட்டி, ஆன்மீக வாழ்வில் நாட்டம் அதிகரிக்கச் செய்து அவளை முழுவதும் ஆட்

கொள்ள லீலை புரிந்தான். இந்த லீலை சுந்தராபாயிக்கு மட்டும் நடை பெறவில்லை. நிறைய பக்தர்களின் வாழ்வில் இந்த துயரச் சம்பவங்கள் ஏற்பட்டு இருக்கின்றது.

பகவானின் லீலையால் பக்தர் களுக்கு வாழ்வில் ஏற்படும் துரதிஷ்டமான கால சூழ்நிலைகள் தான் அவர்களின் உண்மை லட்சியம் என்னவென்று அறிந்து கொண்டு அந்த இலக்கை நோக்கி அடி எடுத்து வைப்பார்கள். உதாரணமாக, மஹாராஷ்டிர மாநிலத்தின் தலைச் சிறந்த மகானாகிய துக்காராம் தன் தாய் தந்தை முதல், மனைவி, பிள்ளை, வியாபாரம், தன் வீடு என யாவற்றையும் தன் 18 வது வயதிலேயே இழந்து நின்றார்.

இந்த துரதிர்ஷ்டமே அவருக்கு வைராக்கியத்தை ஊட்டி பகவானின் மீது தன் முழுமையான சரணாகத வாழ்வை அர்பணிக்க உதவியது. இதன் விளைவாகவே பிற்காலத்தில் லட்சக்கணக்காண மக்களின் ஆன்மீக வழிகாட்டியாக திகழ முடிந்தது.

தமிழ்நாட்டில் முதல்முதலாக சாயி பிரசாரத்தில் ஈடுபட்டு மயிலை சாயி ஆலயத்தை ஸ்தாபித்த ஸ்ரீ நரசிம்ம சுவாமி அவர்கள் வாழ்வில் பெரிய அந்தஸ்தில் இருந்தவர். இவரது வாழ்வில் ஓர் நாள் தீபாவளி அன்று வீட்டில் உறவினர்கள் கூட்டம் அதிகமாக இருக்க, அதில் தன் இரு பெண் குழந்தைகளை காணாமல் தேடினார்.

கடைசியில் தோட்டத்தில் உள்ள கிணற்றில் அவர்கள் இருவரும் இறந்து கிடக்க, பெரும் மன உளைச்சலுக்கும், வேதனைக்கும் ஆளான அவர், இந்த வாழ்வு எதற்கு? இதுதான் வாழ்க்கையா? என தனக்குத்தானே கேள்வி கேட்டுக் கொண்டு தன் ஆன்மாவை உயர்த்தும் சற்குருவை அடைவதே தன் வாழ்வின் இலக்கு என தீர்மானித்து கடைசியில் சாயிநாதரையே தன் குருவாகக் கொண்டு, தன் ஆன்மீக வாழ்வில் வெற்றி அடைந்தார்.

ஒருவன் ஆன்மீகத்தில் உயர திடபக்தி, வைராக்கியம், நம்பிக்கை, பொறுமை மிக அவசியம். இதுவே ஆத்ம சாதகனுக்கு வெற்றியைத் தரும். இவர்களைப் போலத்தான்



சுந்தராபாயின் வாழ்வில் ஏற்பட்ட துக்கம், வலிகள், இழப்பு, யாவும் அவளுக்கு திட வைராக்கியத்தையும், வாழ்வின் பக்குவத்தையும் அளித்தது.

பொதுவாக, வாழ்வில் ஏற்படும் சங்கடங்கள், துக்கங்கள், ஏமாற்றங்கள் இவையாவும் நமக்கு பக்குவத்தை உணர்த்தி மேல் நிலைக்கு அழைத்துச் செல்வதை பலராலும் உணர இய லாது. உண்மையை உணர்ந்தவன் சற்குருவின் பாதங்களைப் பிடிப்பான். உணராதவன் வாழ்ந்து வந்த தன் அற்புதமான வாழ்வையே இழப்பான்.

உலகில் பிறந்த யாவும் கடைசியில் எங்கிருந்து வந்ததோ அங்கேயே செல்லும் இவை இயற்கையின் இயல்பு. அர்த்தமற்ற வாழ்வில் இருக்கும் நிரந்தரமற்ற இன்பத்தை விட்டுவிட்டு, பிறவிப்பயனான ஆத்ம சுகத்தை அடைய வேண்டும் என தன் இலக்கை தீர்மானித்தாள் சுந்தராபாய்.

ஆன்மீக விழிப்புணர்வு ஏற் பட்டவள் தன் வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் விட்டலின் மீது பக்தி செய்ய ஆரம்பித்தாள். பண்டரி நாதனையே தன் ஆத்ம பந்துவாகவும், தன் லட்சியமாகவும் கொண்டு பகவானின் திருவடியை இறுகப் பற்றிக் கொண்டாள்.

மேலும், ஞானத்தேவர், நாமத்தேவர், துகாராம், ஜனாபாய், போன்ற மகான் களின் கீர்த்தனைகளைப் பாடிப்பாடி பக்தியில் திளைக்க வைராக்கியத்தோடு முடிவெடுத்தாள்.

"பூலோக வைகுண்டம்" என்று போற்றப்படும் பண்டரிபுரத்தின் விட் டல் வழிபாட்டில், அவனை தரிசிக்கும் முன் கடைபிடிக்கும் வழிமுறைகளை ஞானத்தேவர், நாமத்தேவர், துகாராம், ஏக்நாதர் போன்ற மகான்கள் ஏற்படுத்தி உள்ளனர்.

மகான்கள் கடைபிடித்த வழிக ளையே தான் இன்றும் பக்தர்கள் கடைபிடிக்கின்றனர். பகவான் பாண்டுரங்கனையே கதி என நினைத்து வாழும் சுந்தராபாயும் அத்தகைய வழியையே கடைபிடித்து எந்நேரமும் விட்டலோடு லயித்து இருப்பாள்.

சுந்தராபாயிக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள தோழி பிக்குபாய் மட்டுமே இருந்தாள். ஒவ்வொரு நாளும் அதிகாலையிலேயே எழுந்து சுந்தராபாய் தன் தோழி பிக்குபாயியை அழைத்துக் கொண்டு சந்திரபாகா என்னும் புனித நதியில் குளித்து முடித்து புண்டரீகன் சமாதியை தரிசனம் செய்து விட்டு, விட்டல் தன் திருவடி பதித்து மகான்களுடன் நடனம் ஆடிய வாலைவண்டி என்னும் மணல் திட்டிற்கு வந்து பகவானுடன் ஆடுவதைப்போல் பாவத்தில் நாமம் பாடிக்கொண்டும், ஆடிக்கொண்டும் தன்னையே மறந்து போவாள்.

அதன்பிறகு பாண்டுரங்கனின் பக்தர்கள் ஆன நாமத்தேவர், சோகா மேளா, ஜக்குபாய், நரஹரி சோனார் ஆகியோருடைய சமாதிக்கு சென்று நமஸ்கரிப்பாள். அவர்கள் திருவடி பட்ட மணற்துகளை எடுத்து தன் தலைமேல் இட்டுக் கொள்வாள்.

அவள் வாயில் சதா விட்டலின் நாமம் இருக்கும் கையோ ஜால்ரா அடித்துக்கொண்டும், காலால் நடனம் புரிந்தபடியே கோவிலின் வாசலில் வந்து நின்று கொண்டு " ஹரி பாட்" என்னும் பாடலைப் பாடி ஆனந்தமாய் இருப்பாள்.

சுந்தராபாயுடன் கூடவரும் பிக்கு பாயிக்கும் மனதில் பிரேமை எழும்பும். நாம் யாருடன் பழகுகின்றோமோ அவர்களது இயல்பு நமக்கும் வரும் அல்லவா?

கோவிலின் வாசலிலேயே சமாதி கொண்டிருக்கும் நாமத்தேவரை வணங்கி உள்ளே சென்று கணபதியை வணங்கி ரங்க மண்டபத்தில் நுழைந்த உடனேயே விட்டலா! விட்டலா! பாண்டுரங்க விட்டலா! பண்டரிநாதா விட்டலா! என ஹரியின் நாமங்களை பாடிக்கொண்டே பாண்டுரங்கனின் ஸ்பரிசம் பட்ட தூணை கட்டிப்பிடித்து ஆலிங்கனம் செய்கின்றாள்.

பிறகு விட்டலின் அருகாமைக்கு வந்த உடன் அவன் அழகை வர்ணித்துப் பாட ஆரம்பித்து விடுவாள். இப்படியாக சுந்தராபாயி நம் விட்டலனது திருமேனியை ரசிக்கின்றாள். பிறகு பகவானை மனதில் எண்ணிக் கொண்டு இல்லம் திரும்புகின்றாள். வீட்டிற்கு வந்ததும் தன் நித்ய பூஜையை விட்டலுக்கு அர்பணம் செய்து பாடு வது, ஆடுவது என அதிலேயே லயமாகி இருப்பாள்.

அதைத்தவிர சுந்தராபாயிக்கு வேறே தும் தெரியாது. அந்தளவிற்கு விட்டல் அவளை ஆட்கொண்டு விட்டான். அவளது தோழியான பிக்குபாயும் அவளது தேவைகளை அறிந்து மனம் கோணாது அனைத்து தேவைகளையும் செய்து வந்தாள்.

முக்கியமாக விட்டலுக்கு உகந்த நாட்களில் தரிசனத்திற்கு வரும் பக்தர்களுக்கு தன்னால் இயன்றவாறு அன்னதான சேவையை விரும்பி செய்வாள் சுந்தராபாயி. மக்களோடு மக்களாய் அவள் வாழ்ந்து வந்தாலும் அவள் பகவானின் மேல் கொண்ட அதீத பக்தியை உணர்ந்த சிலபேர் அவளை ஆசீர்வதிக்கவும் செய்தனர்.

- (தொடரும்)

விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன

அன்பான சாயி சொந்தங்களே...உங்களது நிறுவனங்கள், கடைகள், தொடர்பான விளம்பரங்களை பிரசுரித்து பயனடையலாம்.



முழுபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.2000

அரைபக்க விளம்பரம் கறுப்பு / வெள்ளை ரூ.1000

முன் பின் அட்டை உள்பக்கம் கலர் ரூ.3000

பின் அட்டை கலர் ரூ.4000

1000 ஆண்டுகளாக கட்டப்பட்ட திருவண்ணாமலை

அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் மொத்த கட்டமைப்பும் கட்டிமுடிக்க சுமார் 1000 ஆண்டுகள் ஆகி இருப்பது கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்வெட்டுகள் கடந்த காலத்தைக் காட்டும் கண்ணாடி. திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் நூற்றுக்கணக்கான கல்வெட்டுகள் உள்ளன.

தமிழ், சமஸ்கிருதம், கன்னடம் ஆகிய மொழிகளில் இந்த கல்வெட்டுகள் உள்ளன. இந்த கல்வெட்டுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கதை சொல்வதாக உள்ளன.

திருவண்ணாமலை ஆலயத்தின் சிறப்புகள், ரகசியங்களில் பெரும் பாலானவை இந்த கல்வெட்டுகளில் இருந்துதான் வெளி உலகுக்கு தெரியவந்தன. அது மட்டுமல்ல, திருவண்ணாமலை ஆலயம் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக கட்டப்பட்ட ஒன்று என்ற தகவலும் கல்வெட்டுகள் மூலம்தான் நமக்கு தெரிந்துள்ளது.

இத்தனைக்கும் அங்குள்ள பல நூறு கல்வெட்டுகளில் 119 கல் வெட்டுகள்தான் இதுவரை ஆராயப்பட்டுள்ளன. மொத்த கல் வெட்டுகளையும் ஆய்வு செய்தால் ஆச்சரியமூட்டும் மேலும் ஏராளமான தகவல்கள், ரகசியங்கள் வெளிவர வாய்ப்புள்ளது.

பல்லவர் காலத்து சாசனங்கள் எதுவும் கிடைக்கவில்லை. அவையும் கிடைத்து இருந்தால் அண்ணா மலையார் ஆலயத்தின் பழமை சிறப்புகள், நமக்கு மேலும் அதிக அளவில் துல்லியமாக கிடைத் திருக்கும். சங்கநாட்டு மன்னன், காலச்சூரி மன்னன் ஆகியோரும் திருவண்ணாமலையார் அருளை கேள்விப்பட்டு நிறைய பொன்னும், பொருட்களையும் தானமாக கொடுத் துள்ளனர்.

இதுவரை ஆராயப்பட்ட 119 கல்வெட்டுகளில் இருந்து திரு வண்ணாமலை ஆலயம் முதலில் எப்படி தோன்றியது, எப்படி வளர்ச்சி பெற்றது, யார்யாரெல்லாம் கோவிலை கட்டினார்கள் என்ற உண்மை ஆதாரப்பூர்வமாக நமக்கு கிடைத்துள்ளது.

திருவண்ணாமலை ஆலயம் இப்போது 24 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்டமாக உள்ளது. ஆனால் கல்வெட்டு ஆய்வுப்படி பார்த்தால், இதிகாச காலத்தில் மகிழம் மரத்தடியில் ஈசன் சுயம்புலிங்கமாக தோன்றினார் என்று தெரிய வருகிறது. அதனால்தான் திருவண்ணாமலை தலத்தில் மகிழ மரம் தல விருட்சமாக உள்ளது.

முதல் மற்றும் இரண்டாம் நூற் றாண்டுகளில் மகிழ மரத்தடியில் சுயம்பு லிங்கம் சிறு மண்சுவர் கோவிலாக இருந்தது. 4ம் நூற்றாண்டில் கருவறை, செங்கல்லால் கட்டப்பட்டது. 5ம்

நூற்றாண்டில் அது சிறு ஆலயமாக மேம்பட்டது.

6, 7, 8ம் நூற்றாண்டுகளில் திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வராலும் அண்ணாமலையார் பாடப் பெற்றார். அப்படி பாடப் பெற்றபோது கூட அண்ணாமலையார் செங்கல் கருவறையில்தான் இருந்தார். ஆலயமும் ஒரே ஒரு அறையுடன் இருந்தது.

9ம் நூற்றாண்டில் சோழப் பேரரசு செல்வாக்கு பெற்ற போது, திருவண்ணாமலை ஆலயம் மாற்றம் பெறத் தொடங்கியது. 817ம் ஆண்டு முதலாம் ஆதித்ய சோழ மன்னன் செங்கல் கருவறையை அகற்றி விட்டு கருங்கல்லால் ஆன கருவறையைக் கட்டினார்.


பிறகு ஒரு காலக்கட்டத்தில் அந்த கருவறை மகிழ மரத்தடியில் இருந்து தற்போதைய இடத்துக்கு மாறியது. 10ம் நூற்றாண்டில் கருவறையைச் சுற்றி முதல் மற்றும் இரண்டாம் பிரகாரங்கள் கட்டப்பட்டன. சோழ மன்னர்களின் வாரிசுகள்தான் இந்த பிரகாரங்களைக் கட்டினார்கள்.

அப்போதே திருவண்ணாமலை ஆலயம் விரிவடையத் தொடங்கி இருந்தது. 11ம் நூற்றாண்டில் கோபுரங்கள் எழத் தொடங்கின. முதலாம் ராஜேந்திரச் சோழன் கொடி மர ரிஷி கோபுரத்தையும் சுற்றுச் சுவர்களையும் கட்டினான்.

1063ம் ஆண்டு வீரராஜேந்திர சோழ மன்னனால் கிளிக்கோபுரம் கட்டப்பட்டது. இதனால் திருவண்ணாமலை ஆலயம் கம்பீரம் பெறத் தொடங்கியது.

12ம் நூற்றாண்டில் மூன்றாம் குலோத்துங்கச் சோழ மன்னர் உண்ணாமலை அம்மனுக்கு தனி சன்னதி கட்டினார். 13ம் நூற்றாண்டில் சிறு, சிறு சன்னதிகள் உருவானது. சோழ மன்னரிடம் குறுநில மன்னராக இருந்த பல்லவராஜா, கோப்பெருஞ் சிங்கன் ஆகியோர் இந்த சன்னதிகளைக் கட்டினார்கள்.

அதோடு ஏராளமான நகைகளையும் திருவண்ணாமலை கோவிலுக்கு அவர்கள் வாரி, வாரி வழங்கினார்கள். 14ம் நூற்றாண்டு திருவண்ணாமலை ஆலயத்துக்கு மிக முக்கியமான காலக்கட்டமாகும். அந்த நூற்றாண்டில்தான் வடக்கு, தெற்கு,





மேற்கு பகுதிகளில் கோபுரங்கள் கட்டப்பட்டன. 1340ம் ஆண்டு முதல் 1374ம் ஆண்டுக்குள் இந்த மூன்று கோபுரங்களும் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஹொய்சாள மன்னர் வீரவல்லாளன் இந்த திருப்பணிகளைச் செய்தார்.

16ம் நூற்றாண்டில் விஜய நகர பேரரசர் கிருஷ்ண தேவராயருக்கு, திருவண்ணாமலை கோவில் மிக, மிக பிடித்து போய் விட்டது. திருவண்ணாமலை ஆலயத்தை மிகப்பெரிய ஆலயமாக மாற்றி அமைத்த பெருமைக்கு சொந்தக்காரர் அவர்தான்.

217 அடி உயரத்தில் கம்பீரமாக ஓங்கி உயர்ந்து நிற்கும் கிழக்கு ராஜகோபுரம், சிவகங்கை தீர்த்தக் குளம், ஆயிரம் கால் மண்டபம், இந்திர விமானம், விநாயகர் தேர் திருமலைத்தேவி அம்மன் சமுத்திரம் என்ற நீர்நிலை, ஏழாம் திருநாள் மண்டபம், சன்னதியில் உள்ள 2 கதவுகள், வாயில் கால்களுக்கு தங்க முலாம் பூசியது, உண்ணாமுலை அம்மன் ஆலய வாயில் கால்கள், கதவுக்கு தங்க முலாம் பூசியது, உண்ணாமுலை அம்மன் சன்னதிக்கு முன் ஆராஅமுதக்கிணறு வெட்டியது, அண்ணாமலையார்க்கும் உண்ணாமுலை அம்மனுக்கும் 'கிருஷ்ணராயன்' என்ற பெயரில் பதக்கம் செய்து கொடுத்தது, நாகாபரணம், பொற்சிலை, வெள்ளிக்குடங்கள் ஆகியவை கிருஷ்ண தேவராயரின் முக்கிய திருப்பணிகளில் சில.

1529ல் கிருஷ்ண தேவராயரின் ஆட்சி நிறைவு பெற்றதைத் தொடர்ந்து, தஞ்சை மன்னர் செவ்வப்ப நாயக்கர், கிழக்கு ராஜகோபுரத்தை 1590ல் கட்டி முடித்தார்.

இதற்கிடையே குறுநில மன்னர்களும், சிவனடியார்களும் சிறு, சிறு கோபுரங்களைக் கட்டினார்கள். பே கோபுரம், அம்மணியம்மாள் கோபுரம், திருமஞ்சன கோபுரம், வல்லாள மகாராஜ கோபுரம் ஆகியவை அதில் குறிப்பிடத்தக்கவை. இன்று 9 கோபுரங்களுடன் திருவண்ணாமலை ஆலயம் அழகுற காட்சியளிக்கிறது.

கோபுரங்கள் அனைத்தும் 1370ல் கட்டத் தொடங்கப்பட்டு 1590ம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. கோபுரங்கள் கட்டி முடிக்கவே சுமார் 220 ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளது. இந்த அடிப்படையில்தான் ஆலயத்தின்

மொத்த கட்டமைப்பும் கட்டிமுடிக்க சுமார் 1000 ஆண்டுகள் ஆகி இருப்பது கல்வெட்டுகள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னர்கள் மட்டுமல்ல... மகாராணிகள், இளவரசர்கள், இளவரசிகள், சிற்றரசர்கள், ஜமீன்தார்கள், பிரபுக்கள், அரசு பிரதிநிதிகள், சித்தர்களும் இந்த ஆலயத்தின் திருப்பணிகளில் முக்கியப் பங்கு வகித்துள்ளனர். சோழ, பாண்டிய, பல்லவ, ஹொய்சாள, சம்புவராய, விஜயநகர, தஞ்சை மன்னர்கள் போட்டி போட்டு செய்த திருப்பணிகள்தான் திருவண்ணாமலை தலத்தை நோக்கி மக்கள் அலை, அலையாக வர உதவி செய்தது.

14 ம் நூற்றாண்டில் இருந்து 17 ம் நூற்றாண்டு வரை திருவண்ணாமலை நகரம் பல்வேறு போர்களை சந்தித்தது. என்றாலும் அண்ணாமலையார் அருளால் இடையிடையே திருப்பணிகளும் நடந்தது.

கடந்த சுமார் 150 ஆண்டுகளாக நகரத்தார் செய்து வரும் பல்வேறு திருப்பணிகள் மகத்தானது. சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நாட்டுக்கோட்டை நகரத் தார் திருவண்ணாமலையில் குடியேறினார்கள். மன்னராட்சி முடிவுக்கு வந்த பிறகு திருவண்ணாமலை ஆலயத்தில் மாபெரும் திருப்பணிகள் செய்த பெருமையும், சிறப்பும் நாட்டுக் கோட்டை நகரத்தார்க்கு உண்டு.

1179 ம் ஆண்டு கட்டப்பட்ட உண்ணாமுலை அம்மன் ஆலயத்தை முழுமையாக அகற்றி விட்டு புதிய சன்னதியை நாட்டுக்கோட்டை நகரத்தார்தான் கட்டி கொடுத்தனர். அது மட்டுமின்றி இத்திருக்கோவிலை முழுமையாக திருப்பணி செய்து 12.061903, 461944, 441976 ஆகிய ஆண்டுகளில் கும்பாபிஷேகம் நடத்தி வைத்த புண்ணியமும் நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கே சாரும்.

மன்னர்களில் கிருஷ்ண தேவராயரும், பல்லவ மன்னன் கோப்பெருஞ் சிங்கனும் செய்த திருப்பணிகள் அளவிட முடியாதது. இன்று நாம் திருவண்ணாமலை ஆலயத்தை வியந்து, வியந்து பார்க்கிறோம் என்றால் அதற்கு இந்த இரு மன்னர்களிடம் இருந்த அண்ணாமலையார் மீதான பக்தியே காரணமாகும்.

எத்தனையோ மன்னர்கள் திருப்பணி செய்துள்ள போதிலும் வல்லாள மகாராஜா மீது அண்ணாமலையாருக்கு தனிப்பட்ட முறையில் பாசம் அதிகம் இருந்தது. அதற்கு காரணம் வல்லாள மகாராஜா வாரிசு எதுவும் இல்லாமல் தவித்ததுதான்.

திருவண்ணாமலையை ஆட்சி செய்த அந்த மன்னன் மீது இரக்கப் பட்ட அண்ணாமலையார், அவரை தன் தந்தையாக ஏற்றுக் கொண்டார். அந்த மன்னனின் மகனாக மாறி அற்புதம் செய்தார்.

அது மட்டுமின்றி வல்லாள மகாராஜா மரணம் அடைந்தபோது, அவருக்கு இறுதிச்சடங்குகள் அண்ணாமலையார் சார்பில் செய்யப்பட்டன. மேலும் ஆண்டு தோறும் வல்லாள மகாராஜாவுக்கு மாசி மாதம் அண்ணாமலையார் திதி கொடுத்து வருகிறார். ஒரு மகன், தன் தந்தைக்கு செய்ய வேண்டிய கடமைகளை அண்ணாமலையார் செய்து வருகிறார்

அண்ணாமலையாருக்கு அரோகரா!

தென்னாடுடைய சிவனே போற்றி!

எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!

வாழும் தெய்வம்

அவஸ்தி, முதன்முதலாக1914 ஆம் ஆண்டு எம்.பி.ரேகேயுடன் சீரடிக்கு வந்தார். ரேகேயை, ஆயியுடன் தங்குமாறு பாபா அறி வுறுத்தி இருந்ததால் ஒவ்வொரு முறையும் ரேகே சீரடிக்கு வரும்போதும் ஆயியின் வீட்டில் தங்குவது வழக்கம். எனவே அவஸ்தியும், ரேகேயும் சீரடிக்கு வந்து ஆயியின் வீட்டில் தங்கினர்.

அவஸ்தி, அன்னை ஆயியிடம் ஆன்மீக ரீதியாக மிகுந்த நெருக்கமாகி விட்டார். 1917 நவம்பர் மாதத்தின் முற்பகுதியில் ஆயி மகா சமாதி அடைந்தார். இராதா கிருஷ்ணமாயி இறந்து விட்டாலும் அவஸ்திக்கு சில அமானுஷ்யமான அற்புதங்களையும், அனுபவங்களை அருளினார்.

ஆயி உயிரிழந்த அன்று, தனக்கு தெய்வீக வழிகாட்டுதல்களை வழங்கியமைக்காக மானசீகமாக தன்னையறியாமல் நன்றி கூறிக் கொண்டே இருந்தார் அவஸ்தி. அதன்பிறகு ஆயி அவருக்கு தரிசனம் கொடுத்தார்.

ஒரு நாள் காலை, தனது இல்லத்தில் அவர் சற்று அயர்ந்து உறங்கிக் கொண்டு இருக்கையில், அப்துல்பாய் அவரை கூப்பிடுவதைக் கேட்டார். எனவே திடுக்கிட்டு எழுந்த அவர் ஓடிச்சென்று கதவைத் திறந்து பார்த்தார். அங்கு அப்துல் பாய் இல்லை. ஆனால் பக்கத்து வீட்டுக்காரர் பாபா விற்கு சமர்ப்பிப் பதற்காக பூப்பறித்துக் கொண்டு இருந்தார்.

அவஸ்தி அவரிடம், இங்கு யாரா வது வந்தார்களா என்று கேட்டார். அந்த அளவிற்கு அவரது கனவு தத்ரூப



திரு .அவஸ்தி அவர்களுக்கு அன்னை சற்குருவாக காட்சியளித்தல்

மாக இருந்தது. மூன்றாவது நாள் அவஸ்திக்கு வாமன்ராவ் பட்டேலிடம் இருந்து ஆயி இறந்து விட்டதாக கடிதம் வந்தது.

1918 ஆம் ஆண்டு மே மாதம் அவஸ்தி தன் தங்கை மற்றும் மைத்துனி ஆகியோரோடு சீரடிக்கு வந்தார். அவர்கள் ஆயியின் வீட்டில் தங்கியிருந்தனர். அன்று மாலை பாபாவின் மாலை நைவேத்தியத்திற்கு " பிட்லா பகரை" (கடலைமாவு, கத்தரிக் காயைக் கொண்டு செய்யப் படும் மராட் டிய உணவு) சமர்ப்பிக்க விரும்பினார்.

எனவே இரு பெண்களும் அடுப்பை பற்ற வைக்க எவ்வளவோ முயன்றார்கள். ஆனால் என்ன செய்தும் அடுப்பு எறியவில்லை. உடனே அவர்கள் மூவரும், இந்த அடுப்பில் தானே அவ்வளவு சந்தோசமாக ஆயி வந்தவர்களுக்கு எல்லாம் பாபாவின் பிரசாதத்தை சமைத்து இருப்பார். என்று ஆயியைப் பற்றி சிந்தித்தனர்.

அப்போது, வீட்டின் மேல் தளத்தில் இருந்து ஆயி படிக்கட்டுகளில் இறங்கி வருவதைக் கண்டு வியந்தனர். அதுமட்டும் அல்ல, ஆயி கீழே அமர்ந்து ஊதுகுழலால் ஊதி அடுப்பில் நெருப்பை பற்ற வைத்தார். பிறகு அப்பெண்மணிகள் சுவை மிகுந்த பிட்லா பகரை சமைத்து பாபாவிற்கு நைவேத்தியமாக சமர்ப்பித்தார்கள்.

இதன்படி ஆயி அவர்களுக்கு சாஷாத்காரம் கொடுத்தார். அது எந்த அளவிற்கு தத்ரூபமாக இருந்தது என்றால் அவஸ்தியும், அவரது குடும்பத்தினரும், ஆயி இன்னமும் அங்கேயே உயிரோடு இருப்பதாகவே கருதினர். சிறிது நேரத்திற்குப் பிறகே ஆயி இறந்து விட்டதை உணர்ந்து வியப்பின் விளிம்புக்கே சென்றனர்.

சீரடியில் பாபாவையும், அன்னை ஆயியையும் சந்திக்க அநேகம் பக்தர் கள் வருகை புரிந்தனர். அவர்களில் எத்தனைபேர் இவ்விதமாக பக்தி செலுத்தினர்.

அன்னை ஆயி மறைந்தும் தன் அடியவர்களுக்கு சாஷாத்காரம் கொடுத்திருக்கின்றார் என்றால் அந்த அடியவர்களின் ஒருமுகப்பட்ட பக்தியின் அளவுகோல்தான் என்ன?

பாபாவிடமும், அன்னையிடமும், அவர்கள் மறைந்தும் அவர்களது தரிசனத்தை பெற்ற பக்த ரத்தினங்கள் அவர்களிடம் அப்படி என்ன பிரார்த் தனை வைத்திருப்பார்கள்.

எல்லா உயிர்களிடமும் அன்பு காட்ட கூறியவர்கள், ஒரு சிலருக்கு மட்டுமா தங்களது ஆன்மீக ஜ்ஞானாவை திறந்து வைத்திருப்பார்கள்.

சிந்தியுங்கள் பக்தர்களே! அவர் களுக்கும் நமக்கும் என்ன வேறுபாடு, எங்கே தவறு நேர்ந்தது. எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கின்றான் என்றால் அவர்க ளுக்கு கிட்டிய பேறு நமக்கேன் கிட்டவில்லை.

தேடுங்கள் கண்டடைவீர்கள்!

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

உடல் வளர்ச்சிக்குப் பயன்படும் காளான்

காய்கறிகளின் ராஜாவாக காரட்டைக் குறிப்பிடுகிறார்கள். காய்கறிகளின் இராணியாக காளானைக் குறிப்பிடுகிறார்கள்.

100 கிராம் காளானில் 35% புரதச் சத்து உள்ளது. உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாதது புரதம். முட்டை, இறைச்சி ஆகியவற்றில் புரதம் இருக்கிறது. கொழுப்பும் இருக்கிறது. ஆனால் அவை கொலாஸ்டிரலை இரத்தக் குழாயில் சேமித்து அபாயத்தை ஏற்படுத்திவிடும். காளானில் கொழுப்புச் சத்து இல்லை.

எனவே, பயமின்றிக் காளானை நன்கு சாப்பிடலாம். புரதச்சத்தும், உடலுக்குச் தேவையான சக்தியையும் தந்துவிடும். கொலாஸ்டிரல் சேரும் அபாயமும் இல்லை.

இதனால்தான் சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம், இதயவியாதி, மலச்சிக்கல், வளரும் குழந்தைகளின் உடல் வளர்ச்சி முதலியனவற்றுக்கு காளான் உணவு சிபாரிசு செய்யப் படுகிறது.

குழந்தைகளுக்கும் முதியோர்களுக்கும் எளிதில் ஜீரணமாக வேண்டும். காளானில் உள்ள மிக முக்கியமான அமிலங்கள் எளிதில் செரிமான சக்தியைத் தந்துவிடுகின்றன.

புரதச்சத்து அதிகமாய் இருப்பதால் இராணி என்று வழங்கப்படும் காளானின் இரும்புச்சத்தும், பலவித மான வைட்டமின்களும் உள்ளன.



அதனால் மருத்துவக் குணங்களும் மிக அதிகம். "ஏ" வைட்டமின் அதிகமாய் இருக்கிறது.

காளானின் உடல் வளர்ச்சிக்கு இன்றியமையாத எட்டு வகை அமினோ அமிலங்கள் உள்ளன. காலரா, அம்மை நோய், விஷக்காய்ச்சல், மலேரியா போன்றவை குணமாகக் காளான் சூப் நல்ல பலன் தரும்.

காளானில் உள்ள ஒரு விதமான பொருள் புற்றுநோய் வைரஸ், பாக்டீரியாக்களை எதிர்க்கும் தன்மையைப் பெற்றுள்ளதையும் கண்டு பிடித்துள்ளார்கள்.

வயிற்றுப்புண், ஆசனப்புண் ஆகியன குணமாகக் காளானை முட்டைக்கோஸ், பச்சைப் பட்டாணி ஆகியவற்றுடன் பொரியலாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

பிரியாணி செய்தால் காளான், முட்டைகோஸ் பச்சை பட்டாணி ஆகிய மூன்றையும் தவறாமல், சேர்க்க வேண்டும். இது சத்துணவு, உடல் ஆரோக்கியத்துக்கும் குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கும் இது பயன்படும்.

உடல் நலனில் அக்கறை உள்ள அனைத்து வயதுக்காரர்களும் வாரத்திற்கு இரு நாள்களாவது தக்காளி சூப் போல் காளான் சூப் தயாரித்து அருந்துதல் நலம்.

மட்டன் பிரியர்கள் காளான் சாப்பிட்டால் உடலுக்குச் சக்தி கிடைக்கும். உடலில் கொலாஸ்டிரல் சேராது. இந்தக் காரணத்தால்தான் உலகம் முழுவதும் காளான் உணவு மிகவும் விரும்பிச் சாப்பிடப்படுகிறது.

ஆரஞ்சுப்பழத்தைவிட, 4 மடங்கும், ஆப்பிள் பழத்தைவிட 12 மடங்கும், முட்டைக் கோஸைவிட இரு மடங்கும், புரதச்சத்தும், மருத்துவக் குணங்களும் நிரம்பியது, காளான்.

தாய்பாலை வற்றச் செய்ய விரும்பினால் காளான் சூப் சாப்பிட ஆரம்பிக்கலாம். தொடர்ந்து சாப் பிட்டால் ஏழு, எட்டு நாள்களில் தாய்ப்பால் வற்றிவிடும்.

புண்களைக் குணப்படுத்தி டானிக் போல உடலுக்குச் சக்தி தரும் காளானில் வைட்டமின் 'ஏ' அதிக அளவில் இருக்கிறது. வைட்டமின் 'பி', 'டி', 'இ' ஆகியன ஓரளவு உள்ளன.

காளானை முதன் முதலாக உணவாகச் சாப்பிட்டவர்கள் கிரேக்கர்களும், ரோமானியர்களும் தான். இன்று தென் அமெரிக்காவிலி உள்ள "டைரா லெஃபியுகோ" என்னும் பகுதியில் வசிக்கும் பழங்குடிகளின் முக்கிய உணவாகக் காளான் இருக்கிறது. அவர்களைப் போல் வேறு எந்த ஒரு நாட்டிலும் காளானை அரிசி, கோதுமை போல் முக்கிய உணவாகப் பயன்படுத்துவதில்லை.

அமெரிக்கர்களைவிட ஐரோப்பியர்கள் காளானை அதிகம் விரும்பி சாப்பிடுகின்றனர். இந்தியாவில் எட்டு வகைக் காளான்கள் உள்ளன. இவற்றுள் மொக்குக் காளான், சிப்பிக் காளான், வைக்கோல் காளான் என மூன்று வகைக் காளான்களை உற்பத்தி செய்து பயன்படுத்துகிறோம்.

இதய நோயாளிகள் வலிகுறைந்து உற்சாகமாய் இருக்க காளான் உணவுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்கின்றார்கள் மருத்துவர்கள்.



இந்தியாவைப் போலவே அமெரிக்காவிலும் ஆண்டு தோறும் 'காளான் வளர்த்துப் பணம் குவிப்பது எப்படி?' என்னும் தலைப்பில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட புத்தகங்கள் வெளி வந்துள்ளன. காளான் வளர்ப் பதைச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சி நிலையங்களும் அதிகம் உள்ளன.

அமெரிக்க அரசு காளான் பற்றிய செய்திச் சுருள்களை அடிக்கடி வெளியிட்டு வருவது ஆச்சரியமான செய்தியாகும். நமக்கு பெரும் துன்பம் கொடுக்கும் அசைவ உணவுகளை தவிர்க்க நினைப் பவர்கள் அதற்கு நிகரான சத்துக்கள் கொண்ட காளானை அதிகம் சேர்ப்பதால் உடல் ஆரோக்கியம் மேம்படும்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

திருவாரூர்

குரு தட்சிணாமூர்த்தி

திருவாரூரில் தியாகராஜ ஸ்வாமி கோயில் பிரமாண்டத் தேரும் கமலாலயத் திருக்குளமும் பிரசித்தி பெற்றவை. திருவாரூருக்கு இன்னோர் அடையாளமும் இருக்கிறது. அதுதான் குரு தட்சிணமூர்த்தி ஸ்வாமியின் மடாலயம் குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி இங்கே ஜீவசமாதி கொண்டுள்ளார்.

திருச்சிக்கு அருகே உள்ள சிற்றூர் கீழாலத்தூர். இங்கே சிவசிதம்பரம் பிள்ளை மீனாம்பிகை தம்பதிகள் வசித்தனர். பக்தியிலும் கல்வியிலும் சிறந்து விளங்கியவர் சிவசிதம்பரம் பிள்ளை. இந்தத் தம்பதிக்கு மக்கட்பேறு அமையவில்லை.



வெகுகாலத்திற்குப் பின்பு, திருவண்ணாமலையாரின் அருளால் மீனாம்பிகை அம்மையார் மணிவயிறு வாய்க்கப் பெற்றார். 10 மாதங்கள் கழித்து நல்ல ஆண் மகனை ஈன்றெடுத்தார். திருவண்ணாமலை ஈசனின் அருளால் பிறந்தமையால் அருணாசலம் என்றே சிசுவுக்கு நாமகரணம் சூட்டினர். இவர்தான் பின்னாளில்குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி என அறியப்பட்டார்.

குழந்தைகளுக்கே உண்டான சில குணங்களையும் தாண்டி அருணாசலம் வளர்ந்தான். சில நேரங்களில் பத்மாசனம் போட்டு நிஷ்டையில் இருப்பான். சில நேரங்களில் மவுனம் அனுஷ்டித்து எதையோவெறித்துப் பார்த்தபடி இருப்பான். அருணாசலத்தின் நிலைமை குறித்துப் பெற்றோர் கவலைப்பட்டனர். பிறந்த குழந்தை 5 வயதாகியும் பேசவில்லை .

இந்த நிலையில் ஒருநாள் அவர்களது வீட்டுக்குத் காவி உடை அணிந்த துறவி ஒருவர் வந்தார். சிவசிதம்பரம் பிள்ளை வந்திருந்த சிவனடியாரிடம் , தவம் இருந்து பெற்ற எங்கள் புதல்வன் அருணாசலம் பேசாமல் இருக்கிறான். ஏன் ஸ்வாமி ? என்று கேட்டார்.அந்தக் குழந்தையை நான் பார்க்கலாமா?

என்று கேட்டார் துறவி.

உடனே துறவியை வீட்டின் உள்ளே அழைத்துச்சென்ற சிவசிதம்பரம் பிள்ளை அருணாசலத்தைக் காட்டினார். அப்போது அந்தப் பிள்ளை கண்களை மூடியபடி தியானத்தில் திளைத்திருந்தது. துறவியார் மெல்லப்புன்னகைத்தார். பிறகு சிவசிதம்பரம் பிள்ளையை நோக்கி இந்தப் பிள்ளை தெய்வ அனுக்கிரகத்தால் பிறந்த செல்வம். இந்த உலகத்தில் உள்ளோர் நற்கதி அடைவதற்காக அவதாரம் எடுத்திருக்கிறது. இப்போது உங்கள் புதல்வனுடன் பேசிப் பாருங்களேன் பேசுவான் என்றார்.

சிவசிதம்பரம் பிள்ளையோ குரல் தழுதழுக்க குழந்தாய் அருணாசலம், பேசப்பா, நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய் என்றார். அவ்வளவுதான் 5 வருடங்களாகப் பேசாமல் இருந்த குழந்தை முதன்முதலாகப் பேசியது "சும்மா இருக்கிறேன்". என்றது. சும்மா இருக்கிறாயா, நீ யார்? என்றார் துறவி. மூடிய கண்களைத் திறக்காமலேயே புன்னகையோடு "நீயேதான் நான், நானேதான் நீ "என்று சுருக்கமாகப் பதில் சொன்னது குழந்தை.

சிறுவன் அருணாசலம் சொன்ன வார்த்தைகள் எத்தனை அர்த்தம் பொதிந்தவை என்பதை கவனிக்க வேண்டும். துறவியாக வந்தவர் திருவண்ணாமலையில் வாழும் அண்ணாமலையாரே, நீயேதான் நான், நானேதான் நீ என்றால் அண்ணாமலையாரின் திரு அவதாரமே ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி என்பது விளங்குகிறது அல்லவா?

ஒரு குழந்தையா இப்படிப்



பேசுகிறது? என்று பார்ப்பவர்கள் வியக்கும் வண்ணம் இருந்தது தட்சிணா. மூர்த்தியின் செயல்கள். ஒருநாள் காலை வேளையில் சிவசிதம்பரம் பிள்ளை தன் துணைவியாரிடம் நான் திருச்சிக்குப் போய் தாயுமானவரைத் தரிசித்து வருகிறேன் என்று வீட்டை விட்டுப் புறப்பட இருந்த நேரம். அருணாசலம் அவரை எதிர்கொண்டான்.

ஐயா, இன்னும் சற்று நேரத்தில் உம்மைப் பார்ப்பதற்காக உறவுக்காரர்கள் இருவர் இங்கே வர இருக்கிறார்கள். எனவே உமது பயணத்தை ஒத்தி வைப்பது நல்லது என்றான். பிள்ளையின் கீர்த்தி தெரிந்திருந்ததால் தந்தையும் பயணத்தை தள்ளி வைத்தார். சொல்லி வைத்தாற்போலவே உறவுக்காரர்கள் அவர்களது வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்தனர். இதுபோல

பல விஷயங்களைத் தன் ஞான திருஷ்டியால் பலருக்கும் சொன்னார் தட்சிணாமூர்த்தி ஸ்வாமி.


ஒருமுறை பள்ளியில் சுவடிகளைத் தனக்கு முன்பாக வைத்துக்கொண்டு கண்களை மூடி தியானத்தில் இருந்தார் ஸ்வாமி. அப்போது அவரது ஆசிரியர் அருகே வந்து தம்பி கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருக்கிறாயே, பாடங்களைப் படித்துவிட்டாயா? என்று கேட்டார்.

படித்தாயிற்று என்றார் ஸ்வாமி. சந்தேகப்பட்ட ஆசிரியர் எங்கே படித்ததைச் சொல். கேட்கிறேன் என்று சொல்ல சுவடியைப் பார்க்காமலேயே பாடங்களை அனைத்தையும் கடகடவென ஒப்புவித்தார் ஸ்வாமி.

அதன் பிறகு பாலகனான ஸ்வாமியின் மேல் ஆசிரியருக்கு மதிப்பு கூடியது. இதே போன்ற சம்பவம் இன்னொரு நாளும் நிகழ்ந்தது. ஒரு நாள் வகுப்பில் ஆசிரியர் இருக்கும்போது அவரைப் பார்த்து ஸ்வாமி, உங்கள் குழந்தை வீட்டுத் திண்ணையில் இருந்து கீழே விழுந்துவிட்டதால் கை முறிந்து விட்டது. உடனே போய்ப் பாருங்கள் என்றார்.

ஆசிரியர் பதற்றத்துடன் வீட்டுக்கு ஓடினார். வழியிலேயே அவரது வீட்டு வேலையாள் ஓடிவந்து ஸ்வாமி சொன்ன அதே விஷயத்தைக் கூறினான். உடனே இருவரும் ஓடிச்சென்று சற்றும் தாமதியாமல் குழந்தைக்கு வேண்டிய சிகிச்சைகளை செய்தனர்.

அதன்பின் பள்ளிக்கு வந்த ஆசிரியர் ஸ்வாமியின் முன் பவ்யமாகக் கைகட்டி நின்றார். ஆசிரியரை அவரது இருக்கையில் அமருமாறு ஸ்வாமி எவ்வளவோ கேட்டுக்கொண்டும்



மறுத்துவிட்டார் ஆசிரியர். அபாரமான ஞானத்துக்கு உரியவரான தங்களின் முன்னால் நான் அமர்ந்திருப்பது தகாது என்று கூறினார். இந்த நிலை தொடர்ந்ததால் ஒரு கட்டத்தில் பள்ளிக்குச் செல்வதையே நிறுத்தி விட்டார் ஸ்வாமி. எனவே அவர் பள்ளிக்குச்சென்றது வெறும் 3 மாதமே.

கீழாலத்தூரை அடுத்த ஒரு சிற்றூரில் ஸ்வாமி இருந்தபோது ஆராவமுத ஐயங்கார் என்பவர் தன் துணைவியார் லட்சுமி அம்மாளுடன் ஸ்வாமியைத் தரிசிக்க வந்தார். ஐயங்காருக்கு இருந்த ஒரே குறை அவருக்கு மழலை பாக்கியம் இல்லாமல் இருந்ததுதான். அரங்கநாதப் பெருமான் அவர்களது கனவில் ஒருநாள் தோன்றி தட்சிணாமூர்த்தி ஸ்வாமியின் அடையாளங்களைச் சொல்லி அந்த சித்த புருஷனின் அனுக்கிரகத்தால் உங்களுக்குக் குழந்தை பிறக்கும் என்று அருளினார்.

அதன்படி ஐயங்காரும் அவர் மனைவியும் ஸ்வாமிகளைச் சந்தித்து

அவருக்குப் பணிவிடைகள் செய்தனர். இதை அடுத்த லட்சுமி அம்மாளுக்கு அழகான ஆண் மகவு பிறந்தது. இதன் பிறகும் அவ்வப்போது இருவரும் குழந்தையுடன் வந்து ஸ்வாமியை சந்தித்து ஆசி பெற்றுத் திரும்புவது வழக்கம்.

அதோடு வைணவ சம்பிரதாயத்தைச் சேர்ந்த அந்தக் குழந்தைக்கு ஸ்வாமியின் அருணாசலம் என்ற பெயரையே சூட்டினர். அதோடு ஸ்வாமியின் பெருமைகளைப் பற்றி ஊர் மக்களிடம் எடுத்துரைக்க பலரும் அங்கே கூட ஆரம்பித்தனர்.

சாமிகள் தமது வாழ்நாளில்பல ஊர்களுக்கும் பயணித்து பல அற்புதங்களை நிகழ்த்தி இருக்கிறார் நீலப்பாடி, சிதம்பரம், விருத்தாசலம், திருவண்ணாமலை, திருப்பதி, முதலிய தலங்களுக்குச் சென்று ஆங்காங்கே பல அற்புதங்களை நிகழ்த்தினர். திருப்பதியில் இருந்து புறப்பட்டு சென்னையை அடைந்தார்.

திருவொற்றியூரில் பட்டினத்தாரின் சமாதி அருகே சில நாட்கள் இருந்தார். இறுதியாக திருவாரூர் வன்மீகபுரத்தை அடைந்தார்.அங்கே சோமநாத ஸ்வாமி கோயில் அருகே உள்ள ஓடம்போக்கி ஆற்றின் படுகையிலும் ஆற்றங்கரையில் உள்ள மரங்களின் அடியிலும் தங்கி இருந்து நாட்களைக் கழித்தார்.

பெரும்பாலான நேரத்தை தவம் இருப்பதில் செலவிட்டார். பசிக்கும்போது சாலையில் இறங்கி அங்கே உணவு யாசித்தார். எது கிடைத்ததோ அதை உண்டு வந்தார்.

சித்தூர் மாவட்டத்தில் வசித்து வந்த சோமநாத முதலியார் பெரும் செல்வந்தர். வயிறு சம் பந்த மான நோயால் பெரிதும் பாதிக் கப்பட் டிருந்தார். பார்க்காத வைத்தியர் இல்லை. சாப்பிடாத மூலிகை இல்லை என்றாலும் பலன் இல்லை.

இறுதியாக யாரோ சிலர் சொன்ன தன் பேரில் நடராஜ பெருமானைத் தரிசிக்க சிதம்பரம் வந்து சேர்ந்தார். அங்கு சிவகங்கை தீர்த்தத்தில் நீராடி கோயிலில் உள்ள மூர்த்திகளை வணங்கி உணவே எடுத்துக் கொள்ளாமல் விரதம் இருக்கத் தொடங்கினார்.

சன்னிதியில் இருந்த ஓர் அசரீரி வாக்கு. திருவாரூருக்குச் சென்று தட்சிணாமூர்த்தியிடம் பிரார்த்தனை செய் என்று ஒலித்தது.. மனம் மகிழ்ந்த முதலியார் மறுநாள் அதிகாலையே திருவாரூர் சென்று தியாகராஜ பெருமானின் கோயிலில் அங்குள்ள தட்சிணாமூர்த்திக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தார்.

இரவு வரையில் சன்னிதியிலேயே அமர்ந்து தியானித்தார். அப்போதும் அவரது நோய் குணமாகவில்லை. அப்படியே உறங்கிவிட்டார். அப்போது நடராஜ பெருமான் அவரது கனவில் தோன்றி அப்பனே, நாம் சொன்ன தட்சிணாமூர்த்தி இவர் அல்லர்.

இதே ஊரில் ஒருவன் நிர்வாண



மாகத் திரிந்து கொண்டிருக்கிறான். அவனிடம் செல் என்றார். அதன்படி அடுத்த நாள் காலையில் அலைந்து திரிந்து நடராஜ பெருமான் கனவில் சொன்ன தட்சிணாமூர்த்தியைக் (ஸ்வாமிகள்) கண்டுபிடித்தார் முதலியார்.

பிறகு ஸ்வாமி கொடுத்த பிரசாதத்தை உட்கொண்டார். அந்தக் கணமே முதலியாரைப் பிடித்திருந்த வயிற்று வலி இருந்த இடம் தெரியாமல் போயிற்று. ஆனந்தம் மேலிட, ஸ்வாமியைப் பலவாறு துதித்து வணங்கினார். சிதம்பரம் நடராஜ பெருமானால் தட்சிணாமூர்த்தி என்று குறிப்பிடப்பட்டதால் அருணாசலம் என்கிற ஸ்வாமி. அதன்பிறகு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி என்றே வழங்கப்படலானார். சுவாமிகள் 1835 ஆம் ஆண்டு ஜீவசமாதி ஆனார்.

சுவாமிகளின் ஜீவசமாதி மடாலயம் என்றாலும் மிகப்பெரிய கோயிலாகவே திகழ்கிறது. பலிபீடம், நந்திதேவர் பிராகாரம் என்று விஸ்தாரமாகவே இருக்கிறது மடாலயம் மணி ஓசையும் மத்தள முழக்கமும் சேர பூஜைகள் நடக்கின்றன. இந்த மத்தளத்தை வழங்கியவர் சரபோஜி மன்னர். அதுபோல் ஜீவசமாதியில் இருக்கும் லிங்கத் திருமேனிக்கு அணிவிக்கப்படும் பதக்கத்தையும் இந்த மன்னரே வழங்கி இருக்கிறார்.

ஒவ்வொரு வியாழக்கிழமையும் இங்கு பெருந்திரளான கூட்டம் வருகிறது. பகல் முழுதும் பூஜைகளைத் தரிசித்து அன்று இரவு தங்கி மறுநாள் காலையில் புறப்பட்டுச் செல்வார்கள் ஆவணி மாத உத்திரத்தன்று குருபூஜை நடக்கிறது. வருடாந்திர வைபங்கள் அனைத்தும் இங்கு குறைவில்லாமல் நடந்து வருகின்றன.

மடப்புரம் என்பதே திருவாரூர் நகரத்தின் ஒரு பகுதி. திருவாரூர் பேருந்து நிலையத்தில் இருந்து அரை கி.மீக்கும் குறைவான தொலைவிலேயே மடப்புரம் இருக்கிறது. மிகவும் அமைதியாக இருக்கிறது சமாதியின் பின்புறம் அமர்ந்து தியானம் செய்து அருமையான அனுபவங்களை பெறலாம் .

ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி ஜீவசமாதியான இடத்தின் மேலே ஒரு சிவலிங்கம் ஸ்தாபிக்கப்பட்டு தினமும் வழிபாடுகள் நடந்து வருகின்றன. இதில் நண்பகல் 12 மணிக்கு நடக்கும் பூஜை சிறப்பானது. ஸ்ரீ குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி நண்பகல் 12 மணிக்கு ஜீவசமாதி ஆனதால், அந்த வேளையில் நடக்கும் பூஜையும் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாயிற்று.

குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமி எப்படி இருப்பார் என்றெல்லாம் அறிந்து கொள்வதற்கு அவரது புகைப்படங்கள் இன்று இல்லை. என்றாலும் புலித்தோலின் மேல் அவர் அமர்ந்திருப்பது போன்ற ஒரு திருவுருவத்தையே பக்தர்கள் வணங்கி வருகிறார்கள்.

ஆசனத்தில் அமர்ந்திருக்கும் ஸ்வாமியின் வலக்கால் சற்று நீண்டு தரையில் பதிந்திருக்க. அதன் மேல் தன் இடக்காலை வைத்து அதாவது கால் மேல் கால் வைத்த கோலத்தில் காணப்படுகிறார். இடக்கை வலது தொடையைத் தொட்டவாறும் வலக்கை சின் முத்திரை காண்பித்தவாறும் திகழ்கின்றன.

பிராகாரத்தில் கொத்தனார் அருணாசலம் பிள்ளை என்பவரின் சன்னிதி உள்ளது. திருவாரூர்க்காரரான இவர் ஸ்வாமியின் திருவருளுக்குப் பாத்

திரமானவர். ஒருமுறை இவர் ஸ்ரீரங்கம் ரங்கநாத பெருமாள் கோயிலின் ஏகாதசி விழாவுக்காக அமைக்கப்பட்ட பிரமாண்டமான பந்தலின் உச்சியில் அலங்கார வேலைகளைச் செய்து கொண்டிருந்தார்.

எப்போதும் ஸ்வாமி யின் சிந்தனை யாகவே இருப்பவர் இவர். அன்றும் அப்படியே இருந்தபோது திடீரெனத் தடுமாறிக் கீழே விழுந்தார். விழும்போது தட்சிணாமூர்த்திக்கு அபாயம் என்றே குரல் கொடுத்தார்.

அப்போது திருவாரூர் கமலால யத்தின் மேல்கரையில் அமர்ந்திருந்த ஸ்வாமி. தமது வலது கரத்தை மேலே தூக்கி வைத்துக்கொண்டு வலுவான ஒரு பொருளைத் தாங்குவதுபோல தாங்கி, கீழே வைத்தார். அங்கே கூடி இருந்த பக்தர்கள் எங்கோ ஓர் அதிசயம் நிகழ்ந்துள்ளது. ஸ்வாமியின் அருளுக்குப் பாத்திரமான பாக்கியவான் யாரோ? என்று தங்களுக்குள் பேசிக் கொண்டனர்.

அங்கே ஸ்ரீரங்கத்தில் பனைமர அளவு உயரத்தில் இருந்து கீழே விழுந்த அருணாசலம் பிள்ளை தம்மை யாரோ கைப்பிடித்துத் தாங்குவதுபோல் உணர்ந்தார். அவருக்கு ஒரு சிறு கீறல் கூட ஏற்படவில்லை. இதை சக தொழிலாளர்கள் கண்டு வியந்தனர். உடனே வேலையை அப்படியே போட்டுவிட்டு திருவாரூரை அடைந்து ஸ்வாமியைத் தரிசித்தார். அருணாசலம் பிள்ளை.

பிறகு ஸ்வாமியின் ஆசியுடன் துறவு பூண்டார். பிராகாரத்தில் இருக்கிற இன்னொரு விக்கிரகம் வீர .சு. ஷண்முகானந்த ஸ்வாமியுடையது. இவர் 19311979 காலகட்டத்தில் இங்கு மடாதிபதியாக இருந்தவர். இவரது காலத்தில்தான் தற்போது இருக்கும் நிலைக்கு மடாலயம் விரிவுபடுத்தப்பட்டு முழுவதுமாகக் கல் திருப்பணியாக அமைக்கப்பட்டது. இவரது காலத்தில் 1971ல் முதல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இதை அடுத்து 1998ல் கும்பாபி ஷேகம் நடந்துள்ளது. தற்போது தவத்திரு குமாரனந்த ஸ்வாமி மற்றும் தவத்திரு பிரமானந்த ஸ்வாமி ஆகிய இருவரும் பட்டத்தில் உள்ள இரு குரு மகா சன்னிதானங்கள் ஆவார்கள். 1984 ஆம் ஆண்டில் இருந்து இவர்கள் பட்டத்தில் இருந்து வருகிறார்கள். மகான்கள் பிறக்கிறார்கள்.

மக்களின் சுக துக்கங்களுக்காக தங்களை வருத்திக்கொண்டே வாழ்க் கிறார்கள். மகான்களின் ஜீவன் ஒரு கட்டத்தில் அடங்குதல் என்பது காலத்தின் கட்டாயம். ஆனால் அவர்கள் எங்கும் வியாபித்து தங்களது இன்னருளை இந்தப் பூவுலகுக்கு வழங்கிக்கொண்டே இருக்கிறார்கள். இதற்கு பரிபூரணமான ஒரு சாட்சி திருவாரூர் குரு தட்சிணாமூர்த்தி ஸ்வாமிதான்.

<u>தொடர்புக்கு:</u> தட்சிணாமூர்த்தி மேலாளர், ஸ்ரீகுரு தட்சிணாமூர்த்தி மடாலயம், மடப்புரம், திருவாரூர்-610001. போன்: 04366222732.



சந்திரா பாயின் நினைவலைகள்

பாபா காலமாவதற்கு 20 ஆண்டுக ளுக்கு முன்பு நான் சீரடி சென்று பாபாவை தரிசித்தேன். அன்றிலிருந்து நான் பூஜிக்கும் தெய்வம் அவர் ஒருவரே. ஒவ்வொரு நாளும் அவர் கைநிறைய உதியை எனக்கு கொடுத்து வந்தார்.

அதை நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன். அது மிகவும் மகிமையும், சக்தியும் வாய்ந்தது. பாபாவின் ஒரு பல் வைக்கப்பட்ட புனிதமான தாயத்தையும் நான் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன்.

அவரின் ஞாபகார்த்தமாக அவரே எனக்கு அளித்த பரிசு அது. பாபாவிடம் எனக்கு மிகவும் ஆழ்ந்த பக்தி. அந்த பக்திக்கு சக்தி வாய்ந்த பலன் கிடைத்திருக்கின்றது. நான் 1898 ல் சீரடி சென்ற சமயத்தில் இப்போது உள்ளபடி மசூதி கட்டப்பட்டிருக்க வில்லை. சாதே வாடாவும் அப்போது கட்டப்பட்டிருக்க வில்லை.

இப்போதுள்ள ஸாதே வாடாவிற்கு அருகில் உள்ள வேப்பமரத்தின் அடி யில் பாபா உட்கார்ந்திருந்தார். பாபா மசூதியில் நீரை ஊற்றி விளக்கு எரித்ததை நான் பார்த்திருக்கின்றேன். கந்தை துணிகளால் கட்டப்பட்ட பலகையின் மீது அவர் படுத்துக் கொண்டிருந்ததையும் நான் பார்த்தி ருக்கின்றேன். அவர் படுத்திருந்த பலகையின் நான்கு மூலையிலும் அகல் விளக்குகள் எரிந்து கொண்டிருக்கும்.

அப்போதெல்லாம் பிரபலமான வர்கள் யாரும் சீரடிக்கு வரவில்லை. நான் அங்கே செல்லும் போதெல்லாம் கிராமத்தார் வீடு ஒன்றில் தங்குவேன். பாபா என்னிடம் காட்டிய அன்பு மிகவும் உயர்ந்தது. என் கணவர் திரு.போர்க்கர் பாபாவைப் போய் பார்த்ததில்லை. ஆயினும் அவரிடமும் பாபா அன்பைக் காட்டினார்.

1909 ஆம் ஆண்டு பண்டரீபுரத்தில் ஒரு பாலம் கட்டுவதற்காக, பொறிய ாளரான என் கணவர் நியமிக்கப்பட்டார். ஆதலால் அவர் பண்டரீபுரத்திலேயே வாசம் செய்ய நேரிட்டது. ஆகையால் நான் சீரடி சென்று பாபாவிற்கு சேவை செய்து வந்தேன்.

ஒரு நாள் பாபா என்னை அழைத்து, நீ உடனே பண்டரீபுரத்திற்கு புறப்படு, நானும் உனக்கு துணையாக வருவேன். நீ முதலில் புறப்படு என்றார். ஆகவே நான் உடனேயே துணைக்கு இருவரை அழைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டேன். அங்கே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. நான் அங்கே போய் சேர்ந்த போது என் கணவர் அங்கில்லை.

அவர் வேலையை ராஜினாமா செய்து விட்டு பம்பாய்க்கு சென்று விட்டதாக தெரிந்தது. நான் பெரும் கஷ்டத்திலும், துயரத்திலும் ஆழ்ந்தேன். என்னிடம் இருந்தது கொஞ்சம் பணம் மட்டுமே. அதை வைத்து நாங்கள் மூவரும் குருதுவாடி வரை மட்டுமே செல்ல முடியும்.

நாங்கள் மூவரும் குருதுவாடி

சென்ற போது எங்கள் முன் ஒரு பக்கீர் வந்து நின்று, நீங்கள் எதைப் பற்றி கவலைப்படுகின்றீர்கள் என்று விசாரித்தார். நான் அவருக்கு பதில் கூறுவதை தவிர்த்து நடந்தேன். உடனே அவர் உங்கள் கணவர் தோண்டில் இருப்பதாகவும் உங்கள் துணையுடன் நீங்கள் தோண்டுக்கு போக வேண்டும் என்று கூறி என் கையில் தோண்டுக்கு மூன்று டிக்கெட்டுகளை தினித்து விட்டு கூட்டத்திற்குள் சென்று மறைந்தார்.

அந்த டிக்கெட்டுகளை பயன்படுத்தி நாங்கள் மூவரும் தோண்டுக்குச் செல்லும் இரயிலில் ஏறினோம். அதே நேரத்தில் தோண்டில் என் கணவர் அரைகுறை தூக்கத்தில் ஆழ்ந்து கொண்டிருக்க, அவர் முன் ஒரு பக்கீர் தோன்றி, ஏன் என் அன்னையை கவனிக்காமல் விட்டாய். அவள் உன்னைக் காண தோண்டுக்கு இரயிலில் வந்து கொண்டு இருக்கின்றாள் என்று வண்டியின் நம்பரையும் கூறி விட்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்.

என் கணவர் திடுக்கிட்டு எழுந்து, என்னை கண்டிக்கும் இந்த பக்கிரி யார். என்றவாறே விழித்துப்பார்த்தார். ஆனால் பக்கீர் அங்கிருந்து மறைந்து விட்டிருந்தார். நாங்கள் தோண்டிற்கு சென்ற போது எங்களை வரவேற்க என் கணவர் இரயில் நிலையத்தில் காத்திருந்தார்.

என் கணவர் நான் அவரைத் தேடி வருவதாகக் கூறிய பக்கீரைப் பற்றி கூறி, நான் வழிபட்டுவரும் பாபாவின் புகைப்படத்தை காணவிரும்பினார். நான் போட்டோவை காண்பிக்க, அவரிடம் வந்த பக்கீர் பாபாவே என்று அடையாளம் கண்டு கொண்டு ஆச்சரியப்பட்டார்.

ஒரு குரு பூர்ணிமா தினம். நான் பூஜைப் பொருட்களுடன் பாபாவை வணங்கச் சென்றபோது பாபா, என்னிடம், எனக்கு பூஜைகள் வேண்டாம். கந்தோபா கோவிலில் இருக்கும் உபாசினிக்கு சென்று பூஜை செய் என்றார். பாபாவின் ஆணை எனக்கருதி உபாசினி மகராஜை நான் பூஜை செய்து வழிபட்டேன். மகராஜ் என்னை தடுக்கவில்லை. ஆனால் அதற்குப் பின் உபாசினி மகராஜ்க்கு நான் ஒருபோதும் பூஜை செய்தது இல்லை.

அவரிடம் எனக்குண்டானது ஒரு குருவினிடம் சிஷ்யைக்கு இருக்க வேண்டிய பாவமே! சீரடி மக்களைப் போன்று நான் அவரிடம் வெறுப்பைக் காட்டவில்லை. பாபா அடிக்கடி கூறுவார், நாம் யாரிடமும் வெறுப்பு காட்டக் கூடாது. பொறாமை,விரோதம், எதிர்ப்பு, சண்டைபோடும் மனோபாவம் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். என்று.

என்னிடமும், என் குடும்பத்தாரிட மும் பாபா காட்டிய பரிவு,1918 ல் அவர் இறப்பதற்கு முன்பு மட்டுமின்றி, அதன்



பின்னரும் வெளியாயிற்று.

1918 ம் ஆண்டு தசராவிற்கு மூன்று மாதங்களுக்கு முன்பு தாம் உடலை விட்டபிறகும் என் நல்வாழ் வைப் பற்றியே எண் ணியிருந்தார். என்பதை நான் நன்றாக உணர்ந்தேன்.

" பாய், (பாபா என்னை அப்படித்த ான் அழைப்பார்) நீ என்னை காண இனி இங்கே வந்து சிரமப்பட வேண்டாம். நீ எங்கு இருந்தாலும் உன்னுடனேயே நான் இருப்பேன் என அவர் என்னிடம் உறுதியளித்தார்.

அவருடைய அன்பு அத்தகையது. அவருடைய வாக்கு சத்தியமானது. பின்னர் நான் ஊர் திரும்பி விட்டேன். சரியாக தசரா சமயம், பாபா அடிக் கடி உங்களைப் பற்றி எல்லாம் கூறிக் கொண்டே இருக்கின்றார். இன்னும் சொற்ப காலங்கள் கூட அவர் உயிர் வாழமாட்டார் என்று எனக்கு திட்சித் செய்தி அனுப்பினார்.

அவர் உடலை விடுவதற்கு முன் சரியான சமயத்தில் நான் சீரடிக்குச் சென்றேன். கடைசி கணங்களில் அவருக்கு சிறிது நீர் அளித்தேன். பாக்யாவும் அப்படியே செய்தார். பாபா பாக்யாவின் மீது சாய்ந்தவாறே தன் உடலை விட்டார்.

அதற்குப்பிறகு 1919 ல் ஒருமுறை யும், 1933 ல் ஒரு முறை யும் சீரடிக்குச் சென்றேன். பாபா உறுதியளித்தது போல், எப்போதும் என்னுடனே இருந்து எனக்கு துணை புரிந்து வருகின்றார்.

1921 ம் ஆண்டு முழுக்க முழுக்க பாபாவின் அனுக்கிரகத்தால் எனக்கு ஒரு குழந்தை பிறந்தது. 1918ல் எனக்கு 48 வயதாகியிருந்தும் அதுவரை கருத்தரிக்காததால், எனக்கு ஒரு குழந்தை வேண்டும் என்ற ஏக்கம் இயற்கையாகவே எனக்குள் இருந்தது. சாதாரண மக்களும், மருத்து வர்களும் அந்த வயதிற்கு மேல் கருத்தரிப்பது சாத்தியமில்லை என அபிப்ராயப்பட்டனர். ஆனால் பாபா என் விருப்பத்தினை அறிவார்.

1918 ல் பாய்! உன் உள்ளத்தின் விருப்பம் என்ன? என என்னிடம் கேட்டார். அதற்கு நான், பாபா தாங்கள் யாவும் அறிவீர்கள். நான் சொல்வதற்கு என்ன இருக்கின்றது என்று பதிலளித்தேன்.

இந்திகழ்விற்குப் பின்பு, மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் என் மாதவிடாய் நின்றது. சில மாதங்கள் கழித்து டாக்டர் புரந்தரேயிடம் சாதாரண மருத்துவ பரிசோதனை செய்து கொண்ட போது, டாக்டர் புரந்தரே எனது வயிற்றில் ஒரு கட்டி தோன்றியிருப்பதாகவும், அதை அறுவைச் சிகிச்சை முலம் அகற்ற வேண்டும் என்றும் கூறினார்.

அதற்கு நான் மறுத்தேன். பத்து மாதங்கள் பொறுத்துப் பார்த்து விட்டு பிறகு முடிவு செய்கின்றேன் என்று கூறிவிட்டேன். என்னுடைய 51 வது வயதில், நீண்ட காலம் கருத்தரியாமல் இப்போது குழந்தை பிறக்க எந்த வாய்ப்பும் இல்லை என்று அவர் கருத்து தெரிவித்தார்.

ஆனால் சாயியின் திருவருள் அசாத்தியத்தையும் சாத்தியமாக்கும். பாபா மகா சமாதியடைந்து மூன்று ஆண்டுகள், இரண்டு நாட்களுக்குப் பிறகு நான் ஒரு ஆண் மகவைப் பெற்றேன். செம்பூரில் நிகழ்ந்த பிரசவத்திற்கு, வைத்தியரோ, நர்ஸோ, மருந்தோ எதுவும் கிடையாது.

பிரசவத்திற்கு முன் வழக்கமான பணிகளைச் செய்தேன். இரவு சுகப் பிரசவமாயிற்று. அப்போதும் அதற்கு முந்தின ஒன்பது மாதங்க ளும், எனக்கு

உடல் ரீதியாக பல வித சிக்கல்கள் இருந் தது. அனைத்திற்கும் மருந்தாக தண்ணீரும், உதியையுமே எடுத்துக் கொண்டேன்.

என் கணவர் காலமான போதும் பாபவின் கருணை வெளிப்பட்டது. என் கணவரின் மரணத்திற்கு இரண்டு மாதங்க ளுக்கு முன்பாக பாபா என் கனவில் தோன்றி, அஞ்சாதே நான் ராமச்சந்திராவை அழைத்துச் செல்கின்றேன் என்று கூறினார். பாபா முதலில் என்னை அழைத்துச் செல்லுங்கள் என நான் வேண்டினேன்.

நீ செய்ய வேண்டிய பணி நிறைய இருக்கிறது என்றும், உனக்கு விதிக்கப்பட்ட கடமையை நிறைவேற்ற உன் கணவரின் மறைவிற்குப் பின் வாழ நீ மனதை திடப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று பாபா பதிலளித்தார். இக்கனவை நான் என் கணவரிடம் தெரிவித்தேன். என் கணவர் அதைப் பொருட்படுத்தவில்லை.

அது சாதுர்மாஸ்ய வித காலம். சரியாக இரண்டு மாதங்களுக்குப் பின் அவருக்கு உடல்நலம் மிகவும் பாதிக்கப்பட்டு, உயிர் பிரியும் காலம் வந்தது. அப்போது என் கணவர் தன் ஆயுட் காலம் முடிவது தனக்கு தெரிவதாகவும், ஆனால் சாதுர்மாஸ்ய விரதம் முடிந்ததும் உயிர் துறக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். ஆனால் அதே சமயம் அவர் பூரணமாக நினைவிழந்தார்.

நான் பாபாவிடம் சாதுர்மாஸ்யம் முடியும் வரை அவரை விட்டு வைக்கும் படி பிரார்த்தனை செய்தேன். அடுத்த தினம் அவருக்கு நினைவு திரும்பியது. கை, கால்கள் சுவாதீ னமடைந்தன. என் கணவர் மகிழ்ச்சியுடன் காணப்பட்டார். சாதுர் மாஸ்யத்தின் எஞ்சிய ஏழு நாட்களும் நலமாகச்



சென்றன.அன்று இரவு அவர் தேனீர் அருந்திவிட்டு, பாபாவிற்கு ஆரத்தி செய்யும்படியும், விஷ்ணு சகஸ்ர நாமத்தை பாராயணம் செய்யும் படியும் கேட்டுக் கொண்டார்.

நானும் அவ்வாறே செய்தேன். இது இரவு முழுவதும் நீடித்தது. காலையில் மருத்துவர்கள் வந்து நம்பிக்கை அளித்தார்கள். இருப்பினும் இன்று அவர் இறந்து விடுவார் என்பதனை நான் நன்கு உணர்ந்தேன்.

நான் அவருக்கு பருக சிறிது கங்கை நீரை அளித்தேன். அதைப் பருகிவிட்டு, ஸ்ரீராம், ஸ்ரீராம் எனக்கூறிக் கொண்டே தன் பிராணனை விட்டார். அவரை பகவானின் திருவடிகளுக்கு அழைத்துச் செல்லும்படி, பாபாவிடமும், ஸ்ரீ கிருஷ்ணரிடமும் பிரார்த்தனை செய்தேன். இவ்வாறு பகவானையும், பாபாவையும் உச்சரித்துக் கொண்டே அவர் உயிர் நீத்தார். அவருக்கு அத்தகைய நல்ல கதி கிடைக்கச் செய்த பாபாவின் திருவருளை நான் கண்டேன்.



பாபாவின் அருள் மொழி

யோக சாதனைகளோ, ஆறு சாஸ்திரங்களோ, கடினமான கண்ட யோகமோ உமக்குத் தேவையில்லை. கடின தவமும் வேண்டா, அடர்ந்த கானகத்திற்கும் போகத் தேவையில்லை. உடலை பட்டினி போடும் உபவாச தீட்சைகளும் தேவை இல்லை. காவியுடையும் வேண்டுவன இல்லை. கமண்டலமும் அவசியம் இல்லை.

நீங்கள் உமது வீட்டிலேயே உமது காரியங்களை செய்து கொண்டு இருங்கள் உங்கள் கடமைகளை தவறாது செய்து வாருங்கள் சிறிதளவு நேரத்தை ஒதுக்கி என் நாமத்தை நாமஸ்மரணை செய்யுங்கள். என் கதைகளை பிரேமையுடன் கேளுங்கள். மனனம் செய்யுங்கள், என்னை கோவிலுக்குள் வைத்து கட்டுப்படுத்தாதீர்கள். உங்கள் இதயக் கோவிலுக்குள் வைத்திருங்கள். அஷ்டோபசார, ஷோடோபசார பூஜைகள் செய்து அழுத்துப் போக வேண்டி யதில்லை. மானசீகப் பூஜைகள் தொடர்ந்து செய்து வாருங்கள். அப்போது பாருங்கள்.

நீங்கள் மாயைக்கு வெகு தூரத்தில் இருப்பீர்கள் ஞானம் உமது காலடியை தொட்டுக் கொண்டிருக்கும். முக்தி நிச்சயமாக உங்கள் வீட்டு வாசல் முன் நின்று கொண்டிருக்கும் சாதனையைத் தொடங்காமலே இது அசாத்தியம் என்று கருதாதீர்கள். ஒரு புலுவே அழகிய வண்ணத்துப் பூச்சியாக மாறும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் அது போதும் என் உதவி உங்களுக்கு எப்போதும் கிடைக்கும்.

அனைத்துவிதமான பயங்களில் இருந்தும் விடுபடுங்கள் உங்களுக்குள்ளே இருக்கும் சுயத்தை உணர்ந்து கொள்ளுங்கள் மதம், இனம், மொழி, கலாச்சாரம், பிரிவினையை தவிருங்கள் பிறப்பின் ரகசியத்தை தெரிந்து கொண்ட நீங்கள் இறப்பின் ரகசியத்தையும் தெரிந்து கொள்ளுங்கள் வாத பிரதிவாதங்களை தவிர்த்து மௌனத்தை கடைப்பிடியுங்கள். முட்டாளாக்கும் மூட நம்பிக்கையை தவிர்த்து மெஞ்ஞானத்தை உணருங்கள்.

MAS மஞ்சு அசோசியேட்ஸ்

G/A- 232, உணவு தானிய மார்க்கெட், கோயம்பேடு, சென்னை 107.
போன்: 044 24793822 / 23, 9382163822.
E-mail : kamaraj2306@gmail.com

* எங்களின் சேவைகள்

வங்கி கடன்கள்

- வீட்டுக்கடன்
- அடமானக்கடன்
- வியாபாரக்கடன்



LIC
STAR Health Insurance

இன்சூரன்ஸ்

- LIC & STAR

வருமான வரி தாக்கல்

- டேக்ஸ் ஆடிட்
- NON டேக்ஸ் ஆடிட்



சிறந்த முறையில் செய்து தருகின்றோம்.

மக்கள் சேவையில் 18 வது ஆண்டு..

வாடிக்கையாளர்களுக்கு நன்றி!

எங்கள் நிறுவனத்திற்கு வாடிக்கையாளர்களை அறிமுகப்படுத்தி வாழ்நாள் முழுவதும் வருமானம் பெறலாம். விபரங்களுக்கு எங்களை தொடர்பு கொள்ளுங்கள்!

தொடர்–18

ஸ்ரீராம்

மெய்ஞானப்பாதை

தானே பிரகாசிக்கும் ஆத்மாவை நாம் உணராது இருப்பது எப்படி சாத்தியம். மாயையால் நாம் உள்ளதை உள்ளபடி உணராது இருக்கின்றோம். ஒரு பொருள் வேறு பொருளாக தோன்றுவதே மாயை. மாயையை களைந்து பொருளை, பொருளாகவே கண்டால் அதுவே மெய்பொருள்.

மெய்பொருளை "இது" என்று உணர்த்த முடியாது. ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள் அது அடங்காது. மெய்பொருள் என்பது எல்லையற்றதாக இருக்கின்றது. நம் இந்திரியங்களுக்கும், அறிவிற்கும் எட்டாத நிலையிலும், எட்டாத நிலையிலும் இருக்கின்றது.

பிரபஞ்சம் வெங்காயம் என்று எடுத்துக்கொண்டால் இருக்கின்றது. ஒவ்வொரு சருகாக உரித்துக் கொண்டே வந்தால் இறுதியில் வெங்காயம் என்ற பதத்திற்கு இலக்காக எதுவும் இருக்காது. அது போலமே மாயைகளைக் களைந்து, நான் இதுவல்ல, நான் இதுவல்ல, என்று ஆராய்ந்தால் இறுதியில் நான் என்ற அகங்காரமற்ற நிலையை உணரலாம். இந்நிலையே சீவ பிரம்ம ஐக்கிய நிலை.

இந்திரியம், அகங்காரம்,மனம், புத்தி இவை எல்லாம் காணப்படுபவை. நீர்குமிழி போன்று நிலையில்லாதவை. இவற்றையும் இவற்றின் நிலை இல்லா தன்மையையும் காண்கின்றவன் நிலையானவன் அதுவே ஆன்மா.

"காணப்படும் பொருள் நிலையற்றது. காண்கின்ற அகம் நிலையானது"

காணப்படுவது சத்தியமன்று, காண்பதுவே சத்தியம். காண்பவன் இல்லை என்றால் காணப்படும் பொருள் ஏது? எனவே காண்பது எதுவோ அதுவே மெய்ப் பொருள்.

ஆத்மா சரீரத்தில் இருந்து வேறுபட்டது. அதற்கு பிறப்பு, இறப்பு, மூப்பு, இளைப்பு, ஆகியவை இல்லை. அதற்கு புலன்கள் கிடையாது. ஆகவே அதற்கு ஒளி, ஒலி, ஊறு, சுவை, நாற்றம் ஆகிய ஐந்து விசயப் பொருட்களுடன்



அதற்கு தொடர்பு கிடையாது.

நாம் இத்தகைய ஆன்மாவை விசாரத்தினால் தான் அறிய முடியும். அதற்கு அனுபவமும், அறிவும் அவசியம். அனைவருக்கும் இயல்பாகத் தோன்றும் மயக்கம். அன்னமயமான சரீரமே நான் என்பதாகும். எனவே ஸ்தூல சரீரத்தில் ஆரம்பித்து, அனைத்தையும் விலக்க வேண்டும்.

மறைகளில் கூறப்பட்டுள்ள சாதனை முறைகளை நான்காக பிரிக்கலாம்.

ஒன்று, சாதாரணமாக கூறப்படும் உடல் என்ற சொல். இரண்டாவது, "நான் உடல் அல்ல" என்று உணர்வது.

மூன்றாவது, நான் உடல் அல்ல என்றால் நான் யார் என்ற கேள்வி.

நான்காவது, நானே அப்பரம் பொருள் என்று உணர்வது.

நிர்வாண ஷடகம் என்ற ஆறு பாடல்களில் ஆதி சங்கரர் இவ்வாறு பாடுகின்றார். மனம், புத்தி, இந்திரியம், ஸ்தூல சரீரம், என்று பட்டியலிட்டு, இவை யாவும் நான் அல்ல, என்று கூறி இறுதியில் சிதானந்த ரூப, சிவோகம், சிவோகம்,என்று முடிக்கின்றார்.

ஆத்ம விசாரத்திற்கு தன்னை உணர்வதே அடிப்படை. நான் என்பதே நமக்கு மிகவும் அருகில் இருக்கும் வழியாகும். அதை யார் என்று கண்டுபிடி. அதுவே நாம் இப்போது செய்ய வேண்டியது.

ஒருவன் எதையும் நம்பாது, ஏற்காது புறக்கணிக்கலாம். ஆனால் தன்னைப அபுறக்கணிக்க முடியாது அல்லவா? எனவே தனக்கு புறம்பாக உள்ள பொருட்களை ஆராய்ச்சி செய்வதை விட்டுவிட்டு, தனக்கு மிகவும் நெருங்கி உள்ள நான் யார் என்பதைக் காணவேண்டும்.

தனிமையில் அமர்ந்து,ஆசைகளை அகற்றி, புலன்களை அடக்கி, வேறு சிந்தனைகள் ஏதுமின்றி ஆத்மனை தியானிக்க வேண்டும்.

வேதாந்தத் தத்துவம் வெறும் பேச்சோடு நிற்பதில்லை. அந்த உண்மையை உணர சாதனை புரிய வேண்டும். தியானத்தில் அமர்வது அட்டாங்க யோகத்தில் ஒரு படியாகும். தியானம் செய்பவர் தனித்து இருப்பது நன்று. எண்ண அலைகளின் வலிவை நமது முன்னோர்கள் உணர்ந்ததால் இத்தகைய கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

வேறுபட்ட சிந்தனை, மனப்பக்குவம் உடையவர்கள் ஒன்றாக அமர்ந்து தியானம் செய்வது "சத்சங்கம்" என்ற நிலையில் நல்லது தான் என்றாலும், சாதகனின் முன்னேற்றத்திற்கு அது பாதிப்பை ஏற்படுத்தலாம்.

யோகி என்பவன் தனியான இடத்தில் அமர்ந்து தனது மனதை வெல்ல வேண்டும். மத குருமார்கள் வேதாந்த பாடம் எடுக்கும் போது ஒரு சீடனை மட்டும் வைத்துக் கொண்டு பாடம் எடுப்பார்கள்.

ஆரம்பத்தில் அனைவரும் ஒன்றாகப் படிக்கலாம், தியானிக்கலாம், பக்குவம் வர வர அதற்கேற்ப தான் மட்டுமே பயிற்சியில் ஈடுபட வேண்டும். தனியாக இருந்து சுகத்தை அனுபவி என்பது ஆதிசங்கரரின் வாக்கு.

ஏகாந்தம் மனதில் அச்சத்தையோ, குழப்பத்தையோ ஏற்படுத்தினால் அத்தகைய சாதகர்கள் ஆரம்ப கட்டப் பயிற்சியை கடுமையாக மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை உணர வேண்டும்.

சிந்தித்தல், தியானித்தல், பாவித்தல்,

மூன்றும் இறைச்சிந்தனையிலேயே ஆழ்ந்திருக்க வேண்டும். இஷ்ட தெய்வத்தை சிந்தித்தல், அகண்டாகாரத்தை நினைவுப் படுத்தும் வெட்ட வெளியை தியானித்தல், இதயத்து சோதியை பிரகாசிக்கும் தீபமாக பாவித்தல், என்று தியானத் திற்குரிய பல பாவனைகள் சாதகர்களுக்கு நினைவூட்டப் படுகின்றது. இவற்றில் எதை வேண் டுமானாலும் சாதகன் பின்பற்றலாம்.

தத்தமது மனப்பாங்கிற்கேற்பத் தியானம் செய்யலாம் என்று அறிவுறுத்துகின்றது பதஞ்சலி யோக சூத்திரம். பாவனைக்கு ஏற்ப சித்த விருத்திகள் மாறுகின்றன. தூய, யோக சிந்தனைகள் நல்ல மார்க்கத்தில் நம்மை செலுத்துகின்றன.

தியானம் செய்ய அமர்ந்தால் மனம் அலைபாய்வது இயல்பு. சாதகர்கள் அனைவரும் இதனை பெரும் இடராகக் கருதுவர். மனதை அடக்குவது என்பது யோகத்தின் அடிப்படை நிலை. உடல் என்பது ரதம். புத்தியே சாரதி, ஆத்மா ரதத்திற்கு உரியது.மனம் கடிவாளமாகும். ஐம்புலன்களும் குதிரைகள். புலன்களுக்குறிய விசயங்களே பாதைகள் ஆகும்.



விவேகத்தை இழந்து, அடக்கத்தை இழந்து திரியும் மனதை உடையவனுடைய ரதம், சரியான பாதையில் செல்லாது என்பதை உணர வேண்டும். ஆயினும் விவேக புத்தியோடு கூடிய மனம் ஒரே நிலைப் பாட்டுடன் இருக்குமானால் குதிரைகளும் சரியான பாதையில் செல்லும். அத்தகைய குதிரை களை உடையவனே சரியான சாரதி ஆவான்.

இவ்வாறாக மனம் என்னும் கடிவாளத்தை விவேகத்தோடு கையாண்டு புலன்களாகிய குதிரைகளை கட்டுப்படுத்தும் சாரதியை உடைய, ரதமாகிய ஆன்மா பிறப்பு, இறப்பற்ற மேலான பதவியை அடையும்.

- (தொடரும்)

ஓம் சாய்ராம்

"வாழ்வை வளமாக்கும் சாயி லிகித ஜபம்"

சாய் அன்பர்களே,



முயற்சி திருவினையாக்கும் என்பது வள்ளுவம். வாருங்கள் நாமும் இந்த லிகித நாம ஜெபத்தை ஊக்கத்துடன் முயன்று செயல்பாட்டில் ஆக்கம் காண்போம். சத்குரு சாய் மஹராஜ் திருவருளால் நம் வாழ்வில் மன அமைதியோடு கூடிய வெற்றியைக் காண்போம்.

நமது லிகித நாம ஜபம்
"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்"

நம் எல்லோருடைய இல்லங்களிலும், உள்ளங்களிலும் ஒளி ஒலி வீசட்டும். இதுவரை (30.11.20) 300 நாட்களாக தினமும் 108 முறை எழுதிவரும் நம் சாய் அன்பர்களுடன் இணைந்து சாய் மஹராஜ் திருவருள் பரிபூரணமாக நம்மை வழிநடத்த ப்ரார்த்திப்போம்.

'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;
சுந்தர்சாய், செல்: 9789404451

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்:



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் தரிசிக்க இருப்பது, காஞ்சி சித்தர்,முனிவர்,ஞானி, புலவர், கவிராட்சதர், ஸ்ரீமத், கச்சியப்ப முனிவரின் சீவசமாதி தரிசனம்.

கச்சியப்ப முனிவரின் சீவசமாதி தரிசனம்

தமிழை வளர்த்து, தமிழுக்கு தொண்டாற்றிய கச்சியப்ப முனிவர் திருதணியில் பிறந்தார். பிள்ளைப் பிராயத்தில் இருந்தே ஆன்மீக அளப்பறிய ஈடுபாடுட்டுடன் வளர்ந்தார்.

"சிவமே குரு, தணிகையானே வழிகாட்டி" என உணர்ந்து வாழ்ந்து வந்தார்.

சிறுவயதிலேயே பல ஆன்மீக தலங்களை தரிசித்த சுவாமிகள், திரு வாவடுதுறை அம்பலவாண தேசி கரிடம் தீட்சை பெற்று துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். ஸ்ரீ மாதவ சிவஞான யோகியை வித்யா குருவாக ஏற்றுக்கொண்டார்கள்.

கச்சியப்ப முனிவர், இலக்கியங்கள், தர்க்க சாத்திரம், மெய்கண்ட சாத்திரம், பண்டார சாத்திரங்களை நன்கு கற்று மகாவித்துவானாகினார். கச்சியப்பரின் வாக்கு சுத்தமாகவும், ஆற்றல் நிறைந்ததாகவும் மிளிர்ந்தது.



கொங்குநாடான திருப்போரூர் சிவபெருமான தரிசித்து, திருப்போரூர் புராணம் பாடி அருளினார்கள். அந்த சமயத்தில் ஊரில் மழையில்லாமல்

மக்கள் பஞ்சத்தில் வாடுவதை கண்ணுற்ற முனிவர் திருப்போரூர் நடராஜர் மீது சிவபதிகம் பாடி வேண்டினார்.

முனிவரின் மனமுருகிய வேண்டுதலால் உடனே அவ்வூரில் மழை பொழிந்து ஊரின் பஞ்சம் நீங்கியது. மக்கள் முனிவரை வணங்கி நன்றி கூறினார். மேலும் மக்களின் வேண்டுகோளை ஏற்று. முனிவர் நோய்களைப் போக்க, கந்தவேல் பதிகம் பாடி அருளினார்.

திருத்தணிகை முருகன் இவர் கனவில் தோன்றி, திருத்தணிகை புராணம் பாடச்சொல்ல, முனிவர் திருத்தணிகை புராணம் இயற்றினார். சொல்வளம், பொருள்வளம் என அனைத்தும் ஒருங்கே கொண்ட அற்புத புராணம் திருத்தணிகை புராணமாகும்.

முனிவர் திருத்தணிகையில் பல ஆன்மீக அன்பர்களுக்கும், மாணவர் களுக்கும் தமிழ் இலக்கிய பாடங்களை சொல்லிக்கொடுத்தார். அவர்கள் பிற்காலத்தில் பெரிய தமிழ் புலவர்களாக மாறி தமிழுக்கு சேவை செய்தார்கள்.

கச்சியப்ப முனிவரை குருவாக ஏற்றுக்கொண்ட திருச்சிராபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை தாம் நூல் எழுதும் போது தடுமாற்றமோ, சந்தேகமோ ஏற்பட்டால் உடனே தன் குரு கச்சியப்பரை தியானிப்பதை வழக்கமாகக் கொண்டவர்.

இதன்காரணமாக தடுமாற்றம் விலகி தமிழ் இலக்கியம் மீனாட்சி சுந்தரம் பிள்ளையிடம் விளையாடும் என்று அவரின் மாணவரான, டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் அவர்கள் பதிவு செய்திருக்கின்றார்கள்.

ஒருமுறை முனிவரின் மாணவர், திரு கந்தப்ப அய்யர் வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்தார். இதை அறிந்த முனிவர், "தணிகை ஆற்றுப் படை" என்ற பதிகத்தை பாடியதும் அய்யரின் வயிறுற்று வலி உடனே நீங்கியது.

இச்சக்தி வாய்ந்த இப் பதிகத்தைப் பாடினால், குறிப்பாக, தொழுநோய், வலிப்பு நோய், பூச்சிக்கடிகள் போன்றவை விலகும் என்பது குறிப்பிடதக்கது.

கச்சியப்பர் சென்னையில் வசித்த போது, அங்குள்ள பக்தர்களின் வேண்டு கோளுக்கிணங்க, விநாயகர் புராணம், சென்னை விநாயகர் பிள்ளைத் தமிழ், என்ற நூல்களை இயற்றி அரங்கேற்றி னார். மனம் மகிழ்த மக்கள் அவருக்கு 2000 வராகன் பணத்தை காணிக்கையாக அளித்தனர். முனிவர் அக்காணிக்கையை க்கொண்டு, திருவாவடுதுறை ஆதீன பரமாச்சாரிய நமசிவாய மூர்த்திகளின் சன்னதி மண்டபத்தை கட்டி முடித்தார்கள்.

இறுதியில் காஞ்சிபுரம் வந்த முனிவர், காஞ்சிபுராணத்தின் இரண்டாம்





பாகத்தை தமிழில் மொழிபெயர்பு செய் தார்கள்.மேலும், பதிற்று பற்றந்தாதி, கழிநெடில், வண்டுவிடு தூது, பஞ்சாக்ர தேசிகர் அந்தாதி, முதலியவற்றையும் பாடினார்.

இவருடைய அரிய நூல்கள் பலவும் திருவாவடுதுறை ஆதீன மடத்தில் உள்ளது. இவ்வாறாக நம் தமிழ் மொழிக்கு அரும்பாடுபட்டு உழைத்த கச்சியப்ப முனிவர் 1790 ஆம் ஆண்டு சித்திரை மாதம்,11ம் நாள் மங்கள வாரத்தில், புனர்பூச நட்சத்திரத்தில் காஞ்சிபுரத்தில் சிவப்பரி பூரணமானார்கள்.

சீவபீட முகவரி:

திருக்கயிலாய பரம்பரை திருவாவடு துறை ஆதீன மடம், அருள்திரு, கவிராட்சதர் கச்சியப்ப முனிவர் சீவபீட ஆலயம், பிள்ளையார் பாளையம், காஞ் சிபுரம் – 631501.

காஞ்சிபுரம் பேரூந்து நிலையத்தில் இருந்து ஒரு கிலோ மீட்டர் தொலைவில் பிள்ளையார் பாளையம் திருவாவடுதுறை மடத்தில் கச்சியப்பர் சீவ பீடம் அமைந்துள்ளது.

பேரூந்து மார்க்கம்:

சென்னை – காஞ்சிபுரம்

இறங்குமிடம்:

காஞ்சிபுரம் பேரூந்து நிலையம்.

புகைவண்டி மார்க்கம்:

சென்னை சென்ரல் காஞ்சிபுரம்

இறங்குமிடம்:

காஞ்சிபுரம் இரயில் நிலையம்.



எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer:
Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
9843440806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON
LASTS LONG, REALLY LONG.









HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

S.Jayanthy,
17/7 **A**, *பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,*
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைனில் அனுப்ப:
S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம். ரூ.2000.
திரு.நடராஜன் சிவகாமி. அம்பத்தூர். ரூ.1000.
திரு.எஸ்.ராமமூர்த்தி சுமதி. கொளத்தூர்.ரூ.1000.
திருமதி. இந்திரா வெங்கடாசலம். மந்தைவெளி.ரூ.1000.
திருமதி.சாந்தி.மந்தைவெளி.ரூ.1000.
திருமதி. வாழ்க வளமுடன் சுமதி. பெரியார் நகர்.ரூ.600.
திருமதி.உமா விஜய் ஆனந்த். அயனாவரம். ரூ.600.
திரு.கருணாநிதி,வில்லிவாக்கம்.ரூ.500
திரு.சந்தோஷ். போடிநாயக்கனூர்.ரூ.500



திரு.கேஸ்வர்.ஈரோடு.ரூ.500.
திரு.வெங்கடாசலம்.டி.நகர்.ரூ.500.
திரு.சிவராமன்.பெரம்பூர்.ரூ.600.
திருமதி.பாக்கியவதி. ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.யாமினிபிரியாவிஜயகுமார். அயனாவரம்.ரூ.300.
திருமதி.ஜானகிசீனிவாசன்.கொளத்தூர்.ரூ.200.
திரு.ராதாகிருஷ்ணன்.துறைமுகம். ரூ.200.
திரு.கந்த பாஸ்கர். டி.நகர்.ரூ.200.
திருமதி.ஜெயலட்சுமி.அயனாவரம். ரூ.200.
திரு.சுப்பிரமணியன்,திட்டை.ரூ.200
திரு.விஜயன்.சி.சி.பேங்க் மேனேஜர்.பெரியார் நகர்.ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி. ஓய்வு.அசோக் லேலண்ட். கொளத்தூர்.ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ்-டிராவல்ஸ். பெரியார் நகர்.ரூ.200.
திரு.ஜெகதீசன். அயனாவரம்.ரூ.100.
திருமதி. குமுதா.சின்னாளப்பட்டி.ரு.100
திருமதி. உமா.சின்னாளப்பட்டி.ரூ.100.
திருமதி.சாந்தி மோகன்.AYK ரூ.100.
திருமதி.அபிராமிஅசோக் AYK. ரூ.100.
திருமதி.பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100
திரு.சிவா மளிகை.கொளத்தூர்.ரூ.50.
திருமதி.சாந்திபாஸ்கர்.கொளத்தூர் ரூ.50.
திரு.கங்கா ஸ்டோர்.பூம்புகார்நகர்.ரூ.50
திரு.அகஸ்டின் குடும்பத்தார்.
குன்றத்தூர்.அரிசி.1 மூ
திரு.டாக்டர் லெட்சுமி காந்தம்,
கோவை. ரூ.300
திரு.பத்திரி நாராயணன், நெய்வேலி. ரூ.200



<u>என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.</u>

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 150 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 400 (தபால் செலவு உள்பட)
* ஆயுள் சந்தா – ரு. 1,500 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் முலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

திரு.சிவராமன்.பெரம்பூர்.ரூ.500.
திரு. முருகைய்யா.திண்டுக்கல்.ரூ.500
திரு. சாய் ஆனந்தன். குடந்தை.ரூ.500.
திரு. முருகானந்தம். திருச்சி.ரூ.200
திருமதி.ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர்.ரூ.200.
திருமதி.சூர்யா, புழல். ரூ.500

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.400/ மட்டும் செலுத்தி சந்தாதாரராகுங்கள்!

ரூ.501/மதிப்புள்ள அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: 501/ மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.